# சக்கரம்

கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு ஏடு

இதழ்-04 2012

## ஆண்டுச் சிறப்பிதழ்



"இனி ஒரு விதி செய்வோம்"

'பெரியாழ்வார் ஆச்சிரமம்'

சக்கரம் ஆண்டுச் சிறப்பு இதழுக்கு எம் இனிய வாழ்த்துக்கள்.

# கிருபா லேணர்ஸ்



(அரச அங்கீகாரம் பெற்ற முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை)

# KIRUBA LEARNERS



L



பருத்தித்துறை : 021 492 3201
நெல்லியடி : 021 300 6550
சாவகச்சேரி : 021 227 0700
சுன்னாகம் : 021 224 2022
விசுவமடு : 021 320 1515
கிளிநொச்சி : 021 228 5505

தலைமைக் காரியாலயம்:
268, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P : 021 222 4353, 077 7225292

திறமையான சாரதிகள் சமூக சேவையாளர்கள் அவர்களை
உருவாக்குவதே எமது குறிக்கோள்



# ஸ்ரீ சுசீலா
## ஆபரண மாளிகை



(916 KDM) தங்க நகைகள்
மொத்தமாகக் கிடைக்கும்

Ph: 021-3207437
Cell : 077-7210206

இல. 239, பிரதான வீதி,
பருத்தித்துறை.

ஆண்டுச் சிறப்பிதழ்

உ

ஸ்ரீ ராம ஜெயம்

# சக்கரம்

கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு ஏடு

இதழ் - 04 - 2012 - ஆவணி

ஆசிரியர்
வை. நவதரன்

துணை ஆசிரியர்
அருட்செல்வன்

ஆலோசகர்
பண்டிதர் பொன் சுகந்தன்

உருவம் கொடுத்தோர்
கணபதிப்பிள்ளை
பா.மணிக்குமார்
ஆ.ஜெயராசா
கு.விக்னேஸ்வரன்
த.கமலசுதர்சன்
ப.பிரதீபன்
இ.அகிலிஸ்வரன்
லோகிதா
அன்பரசி

தொடர்புகளுக்கு:

சக்கரம்

பெரியாழ்வார் ஆச்சிரமம்
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்

Email: chakkarameditor@gmail.com
T.P: 0773463358

## சுழற்சியில்...

பிரம்மஸ்ரீ சுதர்சனக்குருகள் 03

பேராசிரியர் இராமநாதன் சாந்தன் 04

பேராசிரியர் கலாநிதி அம்மன்கிளி

முருகதாஸ் 06

திருமதி நந்தகுமாரன்

செல்வ அம்பிகை 22

மார்க்கண்டு ருபவதனன் 15

அச்சுதன் 09

எழிலரசி 05

குறிஞ்சிக்கவி செ.ரவிசாந் 08

ஐங்கரதீபன் 13

திருமதி ஜெ.கந்தவேள் 14

கே.ஆர்.திருத்துவராஜா 18

கதிரித்தம்பி 19

சிவசிதம்பரம் தாரகா 23

ஜெகதீஸ்வரன் ஜெனார்த்தனி 25

க.கஜீவன் 27

எஸ்.நதிபரன் 30

து.தமிழ்ச்செல்வன் 32

வேல் நந்தகுமார் 34

ச.பரஞ்சோதி 37

ஜெ.கீர்த்தனா 40

சி.நிருசன் 41

உ

ஸ்ரீ ராம ஜெயம்

# சக்கரம்

கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு ஏடு

## "கல்"

ஆண்டு மலரின் அடிவருடும் ஆத்மாக்களுக்கு ஆனந்த வணக்கங்கள். சக்கரம் தன்னுடைய சிந்தனைச் சிறகு களை அடித்து ஒரு வருட நிறைவினை நிறைவு படுத்தியதை எண்ண சிந்தை சிறக்கிறது.

தமிழ் சொற்களின் "கல்" என்ற சொல் எல்லோர் மத்தியிலும் பரவலாக கதைக்கப்பட்டு வருகிறது. இச் சொல் லின் பயன்பாட்டு நிலையினை அறிவதே இப்பகுதியின் பண்பும் பயனும்.

இச் சொல் தமிழர் மரபில் இரு தளங்களில் பயன்பட்டு வருகிறது. ஒரு வரை கல்வி கற்க வேண்டும் என்ற ஏவல் தன்மையில் அமைந்த சொல்லாகக் காணப்படுகிறது. மனித செயற்பாடுகளில் உறுதியான வலிமையான தன்மைகளை வளர்ப்பதற்கு பயன்படுவது கல்வி அறிவே. வள்ளுவர் கூட கல்வியின் முதன்மை பற் றிப் பல்வேறுபட்ட அதிகாரங்களினனூ டாக எடுத்து விளங்கியுள்ளார்.

"தொட்டு அனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்று அனைத்து ஊறும் அறிவு"

வள்ளுவன் தவிர்ந்த ஏனையோர் களும் கல்வியின் முக்கியத்துவம் பற்றி மிக அழகாகக் கூறிச் செல்கிறார்கள்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என கல்வி கற்கவேண்டிய பரு வத்தினையும் அடையாளப்படுத்திச் செல்கின்றனர்.

மேலும் கல் என்ற சொல், கட்டிடங்க ளின் உற்பத்திக்குப் பயன்படும் திண்மமான பொருட்களில் 'கல்' என்பது மிக முக்கிய மானது. இச் செயற்பாட்டின் போது "அடிக் கல்" இடல் என்பது ஒரு சடங்கு. ஆசாரங்க ளுடன் மிகவும் நேர்த்தியாக செய் வார்கள்.

அத்துடன் எம்முன்னோர்கள் நற்காரி யங்களில் ஈடுபட்டபோது உயிர் நீத்தவர் களை நினைவு கூறுமுகமாக அவர்கள் இறந்த இடத்தினை பொது இடங்களினை புனிதப் பிரதேசமாக அடையாளப்படுத்தி அவர்களின் பெயர், சிறப்பு, புகழ், செயல் என்பன குறிக்கப்பட்டு அவர் பொருட்டில் நாட்டுவார்கள். அதற்கு அவி பொருட்கள் படைத்து வழிபடுவார்கள். இம் முறையி னையே நடுகல் வழிபாடு என்றும் அழைத்த னர். இதன் தொடக்கத்தினூடாகவே வழி பாட்டு முறைகள் முளை விட்டிருக்கலாம் என்று சிந்திக்க இடமுண்டு.

ஆகவே "கல்" என்ற தமிழ் சொல் ஒரு வலிமையான சொற்பதம். இது கற்பத னால் ஒருவன் அறிவினால் வலிமையடை கிறான். அதேபோல் வைரமான கற்களை உள்ளீடாகக் கொண்டு கட்டப்பட்ட கட்டிடங் கள் வலிமையுடையதாக அமைகின்றது என்பது தெளிவு.

நன்றி

ஆசிரியர்

# தொண்டை நாடு

பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக் குருக்கள்

தொண்டை மண்டலம் : "வேழமுடைத்து மலைநாடுமே தக்க, சோழவள நாடு சோறுடைத்து, பூமியர் கோன், தென்னாடு, முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை, நன்னாடு சான்றோருடைத்து" என்று ஒளவையாரால் புகழப்பட்ட இந்த நாடு கிழக்கே கடலும் மேற்கே பவளமலையும், வடக்கே வேங்கட மலையும், தெற்கே பிறாகி நதியும் எல்லைகளாகவுடையது. இதற்கு இராஜதானி காஞ்சிபுரம், இந்த நாடு பூர்வ காலத்தில் சோழ நாட்டைச் சேர்ந்த நாகபட்டினத்துச் சோழன் நாக லோகம் சென்ற காலத்தில்



நாக கன்னிகையை மணம் முடித்து அவள் வயிற்றிலே பிறக்கும் புத்திரனுக்குத் தனது நாட்டிலே பாதி கொடுப்பதாகக் கூறி மீண்டான். மீளும்போது நாக கன்னிகை தன் புத்திரனை அனுப்புவது எவ்வாறு என்று வினவ, அவன் தொண்டைக் கொடியை அடையாளமாகக் காட்டி தெப்பத்திலேற்றி அனுப்பக் கடவாயென்றாள். அவ்வாறே அவள் புதல்வன் தொண்டைத் தழையைக் குத்துக் கொண்டு அலைகளாற் செலுத்தற்பட்டு நாகபட்டினத் துறையடைந்தான். சோழன் அவனை வளர்த்து நன்னாட்டைப் பிரித்து அவனுக்கு ஒரு பாதியைக் கொடுத்து தொண்டைமான் என்றும் பெயரும் சூட்டி முடியும் சூட்டினான். தொண்டமான் ஆண்டமையினால் இது தொண்டை மண்டலம் என்னும் பெயரைப் பெற்றது. இது நெடுங் காலம் உபநாடாகவும், சில காலம் தனி நாடாகவும் இருந்து பொரும்புகழடைந்தது.

இந்நாட்டிலே திருவள்ளுவர், கச்சியப்பசிவாச்சாரியார், குகனேரியப்பர், கம்பர் பரிமேலழகர், ஒட்டக்கூத்தர், இராமானுஜர், சேக்கிழார், இரட்டையர் அருணகிரிநாதர், பவானந்தி, படிக்காசுப் புலவர், சுப்பையா தீக்ஷிதர், முதலிய வித்வசிகாமணிகளும், அதிகமான், கறுப்பன், சடையப்பன், மணிகண்டன், முதலிய மகாப்பிரபுகளும், உத்தம குணத்தாற் சிறந்த அரசர்களாலும், இருந்து விளங்கினரென்றால், இதன் பெருமைக் கூறுதல் மிகை யாம். படிக்காசுப் புலவர் பெருமையை தொண்டை மண்டலச் சதகத்தில் விரித்துப் பாடியிருக் கின்றார்.

தொண்டமான் - இளந்திரையன் தடியலூர் உருத்திரங் கண்ணராலே பெரும் பாணாற்றுப் படையிலே வைத்துப் பாடப் பட்டவன்.

நன்றி

# நீதியின் வெற்றி

**பேராசிரியர் இராமநாதன் சாந்தன்**
**பேராதனைப்பல்கலைக்கழகம்**

இந்திய ஆன்மீக இலக்கியப் பரப்பிலே கிருஸ்ணர் ஓட்டிய தேருக் குத் தனிச்சிறப்பு உண்டு. இத்தேர் ஒருதத்துவத்தை வெளிப்படுத்துகின் றது. இத்தேரில் செல்லும் பயணி அர்ச் சுனன். இத்தேரினைச் சாரத்தியம் செய்பவர் (தேரோட்டி) கிருஸ்ணர். தேரினை இழுக்கும் குதிரைகள் ஐந்து. தேர் உடலையும், குதிரைகள் ஐம்புலங்களையும், கடிவாளம் மனத் தையும், அர்ச்சுனன் ஜீவாத்மாவைக் குறிக்கும். ஐம்புல நுகர்ச்சியுள்ள மனத்தைப் புத்தியினால் வழிப்படுத்தி ஆத்மா ஈடேற வேண்டும் என்பது தெளிவு.

பாண்டவர்களுக்கும் கௌரவர் களுக்கும் இடையே நிகழும் போர் இத்தேர்க்காட்சியின் பகைப்புலம். நீதிக்கும், அநீதிக்கும் இடையே மனி தனின் தாழ்ந்த உணர்வுகளுக்கும், உன்னத உணர்வுகளுக்கும் இடையி லான போரை இது சுட்டி நிற்கும். சிறு பான்மையினரான பாண்டவர்கள் நெடு ங்காலம் பல்வேறுபட்ட துயரங்களை அனுபவித்த பின்னர். இறுதியில் வெற்றி பெறுவதையும் அநீதிகளைச் செய்த பெரும்பான்மையினரான நூற் றொருவர் ஈற்றில் தோல்வியடைவ தையும் இப்போரிலே காண்கிறோம். நீதியின் பக்கம் கிருஸ்ண பரமாத்மா வடிவில் திருவருள் துணை நிற்கின் றது.

குருஷேத்திரப் போர்க் களத் தில் அர்ச்சுனன் மனச்சலனம் அடைகி றான். உருக்குலைந்து வில்லம்பு களை நிலத்தில் போடுகிறான். இந்த நிலையிலே போர் அணிகள் இரண்டுக் கும் மத்தியிலே இத்தேரிலிருந்து கொண்டே கிருஸ்ணர் அர்ச்சுனனுக்கு கீதையை உபதேசம் செய்கிறார். இவ் உபதேசத்தைக் கேட்ட மாத்திரத்தே அர்ச்சுனன் எதற்கும் சளைக்காத மன உறுதிபெறுகிறான். தனது கடமையைச் செய்து வெற்றிபெறுகிறான். கிருஷ்ணர் இங்கு போதித்த உண்மைகளை இது வரை எந்த அவதாரமும் போதிக்க வில்லை. அவரது செய்தியிலும் பார்க்கச் சீரிய செய்தியை வேறுயாரும், எந்த நூற் றாண்டிலும் மனித சமு தாயத்திற்குத் தந்தருள வில்லைஎன்று துணிந்து கூறலாம். கால, தேச, இன, மத, மொழி வேறு பாடுகளையும், எல்லை களையும் கடந்தது கீதை உபதேசம் சிந்தையள்ளும் அச்செய்தியின் சாரம் இதோ

- நாம் நமது கடமைகளை விருப்பு, வெறுப்பு இன்றிச் செய்தல் வேண்டும்.
- சேவை செய்யும் போது பலனைக் கருதாமல் இயங்குதல் வேண்டும்.
- யான் எனது என்னும் அகந்தையை



விடுத்து இறைவனின் கருவி என்ற பணிவுணர்வுடன் செயலாற்ற வேண்டும்.

- வாழ்க்கையில் உயர்மட்டம், கீழ் மட்டம் ஆகிய இருநிலைகளில் உள்ள மக்களையும் சமமாக நேசிக்கும் நல்லுணர்வு வேண்டும்.
- நண்பன், எதிரி என்று வேறுபாடின்றிச் செயலாற்றும் மனப்பக்குவம் வேண்டும்.
- வெற்றி, தோல்வி இரண்டினையும் சமமாக நோக்கும் மனத்திராணி வேண்டும்.


பார்த்தீர்களா! இப்போது என்கடன் பணி செய்து கிடப்பதே என்று தெளிவு பெறுகிறோம்அல்லவா? நசை களற்றான்

நானென்பதற்றான்
உறுதியுங் களிதரும்
ஊக்கமுடையான்
ஒளியற்று வோன்
ஒளியியல்புடையான் என்ப!
வெற்றி தோல்வியில்
வேறுபாடற்றான்
இங்ஙனமாகித் தொழில்க
ளியற்று வோன்

\- பாரதியார்

எவ்வெப் பொழுது தர்மத் திற்கு இடையுறு நேரிடுகின்றதோ, அதர்மம் அபி விருத்தியடைகின்றதோ, அவவப் பொழுது நான் அவதரிப்பேன்.

## மானுடன்



பரந்த இவ் வையகத்தில்
வளர்ந்த எம் நாட்டினிலே
எத்தனை எத்தனை உள்ளங்கள்
அத்தனையிலும் நான் தேடுவது
கள்ளங்கபடமற்ற தூய உள்ளங்களையே!

பார்க்கும் இடமெல்லாம் தெரிவதுவோ!
ஒப்புக்குச் சிரிக்கின்ற வாய்களும்
வஞ்சக நெஞ்சங்களும்
கருணையற்ற உள்ளங்களுமே!

மனிதமே மடிந்து போன இவ்வையமதில்
மனிதாபிமானம் காண்பதுவும்
மனிதனை மனிதனாகப் பார்ப்பதுவும்
மானுடனின் உள்ளத்தில் மாற்றம்
காண்பதுவும் எப்போதோ!

வி. எழிலரசி தம்பசிட்டி

# பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாட்டாரிலக்கியப் பதிப்புகள்

பேராசிரியை கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்
மொழித்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்

## பதிப்புகளுக்கான சூழல்

பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழிலக்கிய வரலாற்றில் மிகமுக்கிய மான திருப்பங்களை ஏற்படுத்திய காலகட்டமாகும். வாய்மொழி இலக்கி யங்களும் தொல்சீர் எழுத்திலக்கியங் களும் அரங்காற்றுகை வடிவங்களும் அச்சுக்குச் சென்ற காலமாக இந்நூற் றாண்டு காணப்படுகிறது. ஐரோப்பாவி லிருந்து கிறிஸ்தவப்பாதிரிமாரால் அவர்களின் சமய நோக்கிற் காகத் தருவிக்கப்பட்ட அச்சியந்திரம் 1713 இல் தன் பணியைத் தொடங்கியது. எனினும் 1835 இல் சுதேசிகள் அச்சகம் வைத்திருப்பதற் கான அனுமதி வழங்கப்பட்டதன் பின்னரே மெல்ல மெல்ல சுதேசிகளின் அச்சகங்கள் தோற்றம் பெற்றன.

கிறிஸ்தவ மிஷனறிகள் தமது தேவைக்காகவும் அதாவது அவர்க ளது நிர்வாக மற்றும் சமூகத்தேவைக் காகவும் சமயத்தேவைக்காகவும் அவர்களுக்குத் தேவையான நூல் களை வெளியிட்டனர். தொடர்ந்து ஆங்கிலம். கற்ற தமிழர்கள் நூற் பதிப்புகளில் ஆர்வங் காட்டினர் இவ் வாறு ஆர்வங் காட்டியோரில் அதிகமா னோர் ஆசிரியப்பணியிலும் ஆங்கில நிர்வாக சேவையிலும் இருந்தவர்களா வர். அத்துடன் அச்சுக்கே சொந்த மான அச்சையே தங்கியிருக்கும் இத ழியல் தோற்றம்பெற்றது. இந்த இடத் தில் அச்சின் செயற்பாடுகளை நோக்க வேண்டும். தென்னாசியாவில் அச்சின் செயற்பாடுகள் பற்றி பின்வரும் கொள் கைகள் நிலவுகின்றன.

1.அச்சு மொழியையும் எழுத் துருவையும் தராதரப்படுத்தி யது.
2.அச்சிடப்பட்ட நூல்கள் காலனித்து வத்தின் அறிவைக் கட்டமைக்கும் செயல் திட்டங்களின் ஒரு பகுதியாக அமைந்தன.
3.அச்சு சமூகப்பிரக்ஞையைத் தோற்று விக்கிறது.

இந்தியா இலங்கை போன்ற கால னித்துவத்துக்குள்ளிருந்த நாடுகளைப் பொறுத்தவரை இந்த மூன்று செயல்பா டுகளையும் அச்சு மேற்கொண்டுள்ளமை யைக் காண லாம். அச்சிடப் பட்ட நூல்கள் காலனித்துவத் தின் தேவைக் கேற்பவே அச் சிடப்பட்டன என் பதையும் அச்சில் வெளிவந்த நூல்கள் சமூகப்பிரக்ஞையைத் தோற்று வித்தன என்பதையும் அவற்றின பதிப்புகளைக் கூர்ந்து நோக்கும் போது அறிய முடியும்.

கிறிஸ்தவ மிஷனறிகள் ஏற்க னவே குறிப்பிட்டபடி சமய நூல்கள் பல வற்றைப் பதிப்பித்தனர். தொடர்ந்து பாட சாலைகளுக்கான நூல்களைப் பதிப்பிக் கத் தொடங்கினர். தமிழ் உரைநடைப் பதிப்பிலும் அச்சிலும் முக்கிய பங்காற்றி னர். பைபிள் மொழிபெயர்ப்புகள் தமிழ் இலக்கணங்கள் அகராதிகளைத் தவிர மொழிபெயர்க்கப்பட்ட கிறிஸ்தவ இசைப் பாடல்கள் அச்சிடப்பட்டன. 19 ஆம் நூற் றாண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்த வித்து வான்கள் பண்டிதர்களிற் பலர் கிறிஸ்தவ மிஷனரிகளோடு இணைந்து வேலை செய்ய வேண்டியேற்பட்டது. அதனால் புதிய தேவைகளை யொட்டி அவர்கள் அச்சுக்கான புதிய ஊடகமான உரை நடையைத் தோற்றுவிப்பதில் முக்கிய பங்காற்றினர். இத்துடன் 1812 இல் மெட்ராஸ் செயின்ட் ஜோர்ஜ் கோட்டைக் கல்லூரியில் பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டபோது அதிகமான

மரபுவழி வித்துவான்கள் தமிழ் இலக்கிய நூல்களை உருவாக்குவதற்காகவும் தமிழ்க்கதைகளை ஆங்கிலத்தில் சொல்லுவதற்காகவும் உரை நடையில் நூல்களை எழுதினர். ஆங்கிலேயருக்கு தமிழ் விளக்கம் கொடுப்பதற்காகவும் தமிழுக்கு புதிய பாடத்திட்டம் ஒன்றைக் கொடுப்பதற்காகவும் இந்நூல்கள் பயன்பட்டன. ஈசாக் கதைகள் போன்றன தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டன.

சி.வை தாமோதரம்பிள்ளையும் ஆறுமுக நாவலரும் உ.வே.சாமிநாதையரும் தமிழின் செந்நெறி இலக்கியங்களைப் பதிப்பிக்க முற்பட்டனர் கட்டவிழ்க்கும்போது இதழ் முறியும் ஏடுகள் , ஏடவிழ்க்கும் போது ஓரஞ் சொரிகின்றன எழுத்துகளோ வாலுந் தலையுமின்றிக் கிடக்கின்றன என்று தாமோதரம்பிள்ளை ஏட்டிலிருந்த எழுத்திலக்கியங்களின் நிலைபற்றிக் கூறியவை யாவருமறிந்ததே.

## நாட்டாரிலக்கிய அல்லது வாய்மொழி இலக்கியப்பதிப்புகள்

வாய்மொழி இலக்கியங்கள் காலந் தோறும் வாய்மொழியாகவே பயின்று வருவன. அவற்றின் பதிப்புகள் பற்றிய ஆய்வுகள் மிகவும் முக்கியமானவை எனினும் அதைப்பற்றி ஆராய்ந்தோர் மிகவும்குறைவே. எனினும் நாட்டாரிலக்கியப் பதிப்புகளின் முக்கியத்துவம் படிப்படியாக உணரப்பட்டது. நாட்டாரிலக்கியம் சாதாரண மனிதனது உள்ளத்தைப் புரிந்து கொள்ள உதவியது என்பர் அந்த வகையில் 19ஆம் நூற்றாண்டிலெழுந்த நாட்டாரிலக்கியப் பதிப்புகளை ஆராய்வோம் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில நாட்டாரிலக்கிய நூல்கள் பல மீள்பதிப்புச் செய்யப்பட்டன. முதன் முதல் அச்சு உருவான போது ஐரோப்பாவிலும் சரி இந்தியாவிலும் சரி வாய்மொழி இலக்கியங்களே பதிப்பிக்கப்பட்டன. உண்மையில் இந்த முதற்பதிப்புக்களை யார் படித்தார்கள் என்று சொல்ல முடியவில்லை.

அன்றைய காலகட்டத்தில் அச்சு தமிழுக்கு அறிமுகமான போது ஏட்டிலிருந்த இலக்கியங்களைப் பதிப்பதிலே தான் முக்கிய கவனஞ் செலுத்தப்பட்டது. தமிழரின் அடையாளங்களையும் பாரம்பரியங்களையும் தேடும் முயற்சியில் இந்தப்பதிப்புகள் முக்கியமாயின அன்றைய புலவர்கள் மிகவும் கடினமான நடையிலமைந்த செய்யுள் இலக்கியங்களிலே அதிக கவனஞ்செலுத்தினர் அவைதான் சிறந்த இலக்கியங்களாகவும் கருதப்பட்டன. தமிழுக்கு அச்சு வந்ததும் பதிப்பு முயற்சியில் ஈடுபட்டோருக்கு செய்யுளிலக்கியங்களே கைகொடுத்தன. அதிலும் திருக்குறள் நாலடியார் போன்ற நூல்களே அதிகம் பதிப்பிக்கப்பட்டன. தொடர்ந்து ஏட்டிலிருந்த பழைய இலக்கியங்கள் பதிப்பிக்கப்படத் தொடங்கின.

சாதாரண மக்களிடம் இவை சென்றடைவதற்கான வாய்ப்பு இல்லை அவர்களைப் பொறுத்தவரை நாட்டார் இலக்கியங்களே பொழுது போக்குச்சாதனங்கள். பாடல்கள் கதைகள் நொடிகள் என இவை நீளும். ஏனெனில் அன்றைய பொழுது போக்குச் சாதனங்களாக அவையே இருந்தன..

## நாட்டார்கதைகள் மற்றும் கதைப்பாடல்களின் பதிப்புகள்

அக்காலத்தில் நாட்டார் இலக்கியப்பதிப்புகள் பற்றிய பிரக்ஞையே இருக்கவில்லை எனினும் ஆங்கில நிர்வாகத்தின் சில அவசிய தேவைகள் காரணமாக நாட்டார் இலக்கியத்தின் சில பிரிவுகள் கணிப்புப்பெற்றன. அச்சின் வருகையால் ஏற்பட்ட பத்திரிகை வளர்ச்சி மற்றும் சமயப்பிரச்சாரங்கள் புதிய நிர்வாக அறிமுகத்தின் காரணத்தினால் மக்களுக்கு விளங்கப்படுத்தப்பட வேண்டிய செய்திகள் போன்றன. மக்களுக்கு விளங்கக் கூடிய உரை நடையிலமைய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தமிழில் உரைநடை ஏலவே காணப்பட்டாலும் தொல்சீரிலக்கியங்களுக்கு எழுதப்பட்ட உரைநடைக்கும் சாதாரண பேச்சு வழக்கிலான உரைநடைக்கு

மிடையே பாரிய வேறுபாடு இருந்தது அவ்வாறு பார்க்கும்போது 19ஆம் நூற்றாண்டில் நாட்டார் கதைகளே அதிகமாகப் பதிப்பிக்கப்பட்டதை அறிய முடிகிறது. தொடர்ந்து கதைப்பாடல்கள் பதிக்கப்பெற்றன.

19ஆம் நூற்றாண்டின் இந்திய அச்சு வரலாற்றில் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய விடயம் என்னவெனில் வாய்மொழி இலக்கியங்கள் விசேடமாக நாட்டார்கதைகள் அதிகமாகப் பதிப்பிக்கப்பட்டமையாகும் என ஸ்ருவர்ட் பிளக்பேண் கூறுவார். 1800 -1835 க்கிடைப்பட்ட காலப் பகுதியில் இலக்கணங்கள் அகராதிகளைத் தவிர்த்துப் பார்த்தால் வாய்மொழிக் கதைகளே அதிகமாகத் தொகுக்கப்பட்டு பதிப்பிக் கப்பட்டுள்ளன. இவை அக்காலத்தில் அதிகமாகப் பதிப்பிக்கப்பட்ட திருக்குறள் நாலடியாரையும் தொகையில் மிஞ்சிவிட்டன. இவற்றுள் முதலாவதாகப் பதிப்பிக்கப்பட்டது விக்கிரமாதித்தன் கதைகள் ஆகும் இது முதன்முதலில் 1804 இல் பதிப்பிக்கப்பட்டது. அடுத்துப் பதிப்பிக்கப்பட்டது சதுமுக ராவணன் கதை 1808 இலும் அடுத்து மரியாதை ராமன் கதை தமிழறியும் ஆண்டை, கதை என்பன 1819 இலும் புரூரவச் சக்கரவர்த்தி கதை 1819 இலும் கதாமஞ்சரி 1812 இலும் பரமார்த்த குருவின் கதை 1822 இலும் பதிப்பிக்கப்பட்டன. தமிழ்ப்பஞ்சதந்திரம் 1819இலும் கதாசிந்தாமணி பிரபலமான வாய் மொழிக் கதைகளின் தொகுப்பாக 1833 இலும் மொழி பெயர்ப்புக்கதைகள் 1850களிலும் வெளியிடப்பட்டன. கதைப்பாடல்களைப் பொறுத்தரை நல்லதங்காள்கதை அம்மானை வடிவில் 1869 இல் வெளியிடப்பட்டது அதைத் தொடர்ந்து அது தொடர்ச்சியான பல பதிப்புகளைக் கண்டது. அதேபோல கோவலன் கதை 1873இல் பதிப்பிக்கப் பட்டு தொடர்ந்து பல பதிப்புகளைக் கண்டது. வேறு பல கதைப் பாடல்களும் பதிப்பிக்கப்பட்டமையைப்பற்றி அருணாசலம் எடுத்துக் காட்டியுள்ளார்.


*சுழலும்.....*

# வர்ண இரதமேறி மாயவன் வரும்வேளை........!



மண்ணையுண்ட நந்தகோபாலன்
வர்ண இரதமேறி
வலம் வரும் வேளை....
மருவிடும் எம் துயர் யாவும்
விலகி ஓடும்!
வெண்ணெய் திருடித் தின்ற
வீரமிகு கண்ணன்
வீதியில் நடமிடும்போது
வேண்டும் வரங்கள் யாவும்
வெற்றியுடன் நிறைவேறும்!

பாஞ்சாலி துயில் காத்த
பாற்கடல் பள்ளி கொள்
பரந்தாமனை எண்ணும்போது
பஞ்சுபடாத் துன்பங்கள் யாவும்
பறந்தே போகும்!
நித்தமும் அவன் பாதம்
நீணிலத்தில் பணிந்திடவே
நேசமுடன் மாயவன்
நிலையிறங்கி வருவான்
நிம்மதி வாழ்வை என்றும்
தந்தருள்வான்



கவி ஆக்கம்
குறிஞ்சிக்கவி செ.ரவிசாந்
வீரமனை, குப்பிளான்.

நற்றினை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று
இத்திறத்து எட்டுத்தொகை.

தமிழின் தமிழர்களின் பழம் பெரும் தொன்மைகளைப் பெருமைகளைப் போற்றும் இலக்கியம் சங்க இலக்கியம். இக்கால இலக்கியம் அகம் புறம் என்ற தளங்களில் பிரயாணம் செய்தமையினை உணரமுடிகின்றது. அத்துடன் சமயத் தன்மை கொண்ட வாசனை நுகரும் படைப்புக்களும் பரவத் தொடங்கியது கண்கூடு.

அந்தவகையில் சங்ககாலத்தில் தோற்றம் பெற்ற எட்டுத்தொகை இலக்கியங்களில் இறைமணம் கமழும் இலக்கியப்படைப்பாகவும் தமிழர் பண்பாடுகளைத் தொட்டுக் காட்டும் கூறுகள் பரிபாடலில் பரந்து கிடக்கின்றன.

இப்பரிபாடலில் திருமால் செவ்வேல் வையை என்ற மூன்று பெரும் பிரிவாக இலகுபடுத்தப்பட்டுள்ளது. இங்கு திருமால் என்ற பகுதியினை எடுத்து. திருமால் பற்றிய செய்தி களையும் செயல்களையும் அவதாரச் சிறப்புக்களையும் தேடி நுகர்வதே இதன் பண்பும் பயனுமாகும்.

# பரிபாடலில் விஷ்ணு வழிபாட்டுத் தேடல்

– அச்சுதன்



இவ்விலக்கியம் முன்னர் எழுபது(70) பாடல்களைக் கொண்டமைந்தாலும் தற்பொழு இருபத்திரெண்டு(22) பாடல்களே எம்கண்ணில் நிதர்சனமாவது நிந்திப்பதற்குரியது தான்

முதலில் பரிபாடல் என்ற பதத்திற்கான கருத்துநிலை வடிவங்கள் பற்றி நோக்குவோமாயின். இச் சொல் பல்வேறுபட்ட அர்த்தப்பரிமாணங்களுக்கு எமை அழைத்துச் செல்கின்றது. பரிபாடல் என்பது பரிந்து வருவது ஏற்றுவருவது. என்றும் கூறுவர். அத்துடன் பரிப்பா என்னும் பாவினங்கொண்டு படைக்கப்பட்டமையினால் இது இசை நயம்

ஓசை நயம் கொண்டமைந்துள்ளது. அத்துடன் இதில் வரும் அடிச்சொல்லான பரி என்பது குதிரை என்றும் பொருள்தரும். நடை ஓட்டம் வேகம் என்னும் அர்தங்களில் விரிந்து செல்கின்றது. இதன் கருத்தும் வேகமாக மனதில் பதியும் என சிந்திக்க இடமுண்டு.

திருமாலின் வழிபாட்டுக் கூறுகளை அடையாளப்படுத்துவதுடன். பல தன்மைகளைக் கூற முனைகின்றேன். திருமால் பற்றிக் கூறும் முதல்பாடலில் திருமாலே! ஆயிரம் விரிந்த தலையினையுடைய ஆதிசேடனாகிய பாம்பணையில் பள்ளி கொள்கின்றாய் இதனைக் காண்பவர்களுக்கு அச்சம் கொள்ளும் வகையில் சினத்தீயை கக்கும் தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றது. அத்துடன் குற்றமற்ற வெண்சங்கு போன்ற திருமேனியினையும் திருமகள் விரும்பி உறையும்மார்பினையும் கொண்ட வனாகக் காணப்படுகின்றாய்.

"ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை
தீ உமிழ் திறலொடு முடிமிசை அணவர
மாவுடை மலர் மார்பின்மை இல்வாள் வளைமேனி"

மேலும் கருடன் என்னும் பறவையினை வரைந்த கொடியை உடையவனும். தாமரை மலரினை வெல்லும் கண் களினையும். காயா மலர் போலும் திருமேனியினையும் கொண்டுள்ளாய். அவ்வழகான ஒளிமயமான மார்பில் கௌத்துவ மணி மாலையையும் அணிந்துள்ளாய். நீல மேனியில் தீப்பிழம்பு போன்ற பொன்னாடையினை உடுத்தியுள்ளாய்.

### சக்கரம்

உடல் அமைப்புக்கள் தோற்றம் பற்றிக் கூறிய சங்கத்தினர். அடுத்து சக்கரம் பற்றிக் கூறுகின்றார்கள். அதாவது உனது அழகான வலக் கரத்தில் பொன்மயமான அழகு கொண்ட சக்கரப் படையினை கொண்டு. நிலையான உயிர்களுக்கு எல்லாம் தலைவனாக விளங்குகின்றாய்.

"பொன் அணி நேமி வலம் கொண்டு ஏந்தி
மன்னிய முதல்வன் ஆதலின்"

என்ற பாடலடி இதனைச் சுட்டி நிற்கின்றது.

மேலும் அவதாரச் சிறப்புக்கள் பற்றிக் கூறுகின்றார்கள். அதாவது மாயவனின் அவதாரங் களில் வராகம் "நரசிம்மம்" அவதாரம் பற்றிச் சொல்லப்படுகின்றது.
அவற்றில் வராக அவதாரசத் தன்மைகளினை முதலில் நோக்குவோம்.

ஐம்பூததங்களின் நுண் அணுக்கள் எல்லாம் துகழாகி நீரில் புதைந்த போது. அதனைப் பல காலகட்டங்கள் கடந்த பின்னர். உயிர்கள் தோன்றி வாழும் பொருட்டு நீரினுள் மூழ்கிக் கிடந்த நிலவுலகினை நீ பன்றியாக (வராகம்) மாறி மேலே கொண்டுவந்து. இதனை (வராக கற்பம்) என்னும் பெயருடையதாய் விளங்கிற்று. அத்துடன் யாராலும் எண்ணிப் பார்க்க முடியாதவனாகவும்.; சக்கரப்படையினை உடையவனும்; உயிர்களுக்கெல்லாம் தலைவன்; ஊழிகளுக்கெல்லாம் முதல்வனும். இவ்வாறு சிறப்பு மிக்க உன்னை போற்றி வணங்குகின்றோம்.



"கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி ஒருவினை உணர்த்தலின் முதுமைக்கு
ஊழியாவரும் உணரா
ஆழி முதல்வ! நிற் பேணுதும் தொழுது".
"புருவத்துக் கரு வல் கந்தரத்தால்
தாங்கி இவ் உலகம் தந்து அடிப்படுத் ததை நடுவன்
ஓங்கி பலர் புகழ் குன்றினோடு ஒக்கும்"

இப்பாடலும் மேற்கூறிய கருத்தினை தளமாக கொண்டு காணப்படுகின்றது.

இதே போன்று இரணியனை வதைசெய்வதற்காக நரசிம்ம அவதாரம் எடுத்த தன்மையினையும் இப்பரிபாடல் கூற மறக்கவில்லை.

அதாவது இயல்பாகவே சிவந்த கண்களை உடைய திரு மாலே! நீ உன்மீது பேரன்பு பூண்ட பக்தனாகிய பிரகலாதன் புகழ்ந்து பாடினான். இப்பாட்டுக்களையும். இப் புகழ் பாடல்களையும் புகழ்பேச்சுக்களையும் பொறுத்துக் கொள்ள முடியாது. கோப அக்கினியில் புதைந்த நெஞ்சினை உடைய இரணியன். தன்னுடைய அரும்புதல்வன் என்று சிறிதும் எண்ணாது. புதல்வனுக்கு பல் வேறு கொடுமைகளால் துன்புறுத்தினான். மிகுதியான துன்பத்தினால் பெரும் புகழுடைய பிரகலாதன். உன்னை இகழ்ந்து பேசுபவன் தந்தையே ஆதலினால் தான் அவனை இகழ்ந்து பேசாது இருந்தான்.

"பிருங்கலாதன் பல பல பிணி பட
வலந்துழி மலர்ந்த நோய் கூர் கூம்பிய நடுக்கத்து
அலர்ந்த புகழோன் தாதை ஆகலின்-இகழவோன"
என்ற பாடலடியும் இதனைப் பறை சாற்றுகின்றது.

அத்துடன் உன் பக்தனாகிய பிரகலாதன் நிலைக்கு இரங்கி. நீ வரம் கொண்ட இவ்விரனியனின் பெரியமார்பினில் பாய்ந்து துண்துகழ்கள் போல அவன் தசைகளை துண்டு துண்டாக்கும் படியாக கூரிய நகத்தினைக் கொண்ட வன் நீயல்லவோ.

"நன்ற நட்ட அவன் நன்மார்பு முயங்கி
ஒன்றா நட்டவன் உறுவரை மார்பின்"
இதனுடே உணரமுடிகின்றது.

அடுத்து திருமாலுக்குரிய கொடிகளைப் பற்றிக் கூறுவதனை துணிவோமாயின். மாலுக்கு பல்வேறுபட்ட கொடிகள் இருப்பதாக கூறுகிறார். அதா



வது கருடன் உருவம் தீட்டப்பட்டு ஓங்கி உயர்ந்த கொடியை உடைய வனே! இவ்வாறு கருடக் கொடியனைக் கொண்ட உனக்கு. பனைக் கொடியும் ஒன்று. உயர்ந்த கொடிகளில் ஒன்று கலப்பைக் கொடி. அவ்வுயர் கொடிகளில் யானைக் கொடியும் ஒன்று. இவ்வாறு பல்வேறு கொடிகள் காணப்படாலும். உனக்கு மிகவும் பொருத்தமானதும் சிறப்பனதுமான கொடியாக திகழ்வது. கருடக் கொடியே ஆகும். பிற கொடிகள் யாவும் இதற்கு ஈடு இணையாக முடியாது. கொடிய நஞ்சினை உடைய பாம்பின் உடலையும் உயிரையும் உண்ணும் கருடனைத் தாங்கிய சிறப்பு மிக்க கொடி யாதலனால் அதற்கு பிறிதொன்றும் ஒப் பாகாது.

"சேவல் ஓங்கு உயர் கொடி
நின் ஒன்று உயர் கொடி பனை
நின் ஒன்று உயர் கொடி நாஞ்சில்
நின் ஒன்று உயர் கொடி யானை
நின் ஒன்றா உயர் கொடி ஒன்று இன்றும்
விட முடை அரவின் உடல் உயிர் உடுங்கு உவனம்"

என்னும் பாடல் இக்கருத்தினையும் சுட்டிநிற்கின்றது.

திருமாலை பல்வேறுபட்ட மொழிகளினால் புகழ்ந்து பாடுகின்ற தன்மையினைப் பரிபாடல் கொண்டுள்ளது. கருடக் கொடியினைக் கொண்டவன் என்று... இனிய வேதங்களால் சொல்லப்படும் நல்ல புகழை உமையவன் என அவரின் திருமேனியழ கினை வர்ணிக்கும் போது ஐந்து வகையான நிறழகினைக் கொண்டவன் என்று புகழ்கிறார்கள் . அதாவவது. நீ கார் மேகம் போன்றவன். காயகமலர். கடல், இருள், நீலமணி ஆகிய ஐந்தினையும் ஒருங்கே சமைத்த எழில் பொருந்திய திருமேனியினைக் கொண்டவன்.

"கார் மலர்ப் புவை கடலை இருள் மணி
அவை ஐந்தும் உறழும் அணி கிளர் மேனியை"


என்னும் பாடற் பகுதி பகர்கின்றது.

கண்ணனைப் பற்றி மேலும் புகழுகையில் உன்னை துதிசெய்வோருக்கு இருவினைகளும் இல்லையாம் என்றும். முத்தொழில்களில் காத்தல் தொழிலினை உனதாகக் கொண்டவனே! உன் அடியவர்களின் குறை கேட்டு தீர்ப்பவனாகவும். உலகத்தினை இயக்குகின்ற நின்னுடைய அறம் மிகவும் நுண்ணியமானது. ஆனால் தர்மத்திற்கு மாறான அதர்மத்தின் மீது வெம்மைக் கோலம் கொள்பவனே! எனப்பல இயல்பு கொண்டவனே!



இவ்வாறு திருமாலின் பல்வேறு தோற்றப் பொலிவுகளையும் சிறப்புக்களையும் பெருமைகளையும் தொட்டுக் காட்டும் பகுதிகளாக பரிபாடல் பாடற் கூறுகள் கருத்துரைக்கின எனவே சங்க இலக்கியங்கள் வெறும் அகம் புறம் என்னும் இருதளங்களி னைத்தாண்டி பக்தியினையும் கூற மறக்கவில்லை. என்ற செய்தியினை இது சுட்டிநிற்பதனை உய்த்துணர முடிகின்றது.


நன்றி



# அவதார புருஷா



வல்லிபுரம் பதிதனிலே
வகையுடனே! விற்றிருந்து
உன்னை நாடிவரும்
அன்பர்களைக் காப்பதற்காக
காத்திருக்கும் கடவுளே!
அவதார புருஷனே!
தீராத குறைகளை
தீர்த்திடும் கடவுளே!
தீர்த்தக் கரையிலே
கரையுமைய்யா எங்கள்
மனம்
பக்திப் பரவசத்தால்
பதறுமைய்யா எங்கள்
சரீரம்



அன்புடன் வீற்றிருந்து
அடியார்க்கு அருளளிக்கும்
அவதாரத்தின் புருஷனே!
வல்லிபுர மாயவனே!
மாயமாக நீயிருந்து
மங்கையரை மயங்க வைக்கும்
மதுசூதனனே!
வடத்தினை ஒருமுறை
பிடிப்பதறகாக வாடுமையா
பக்தர்கூட்டம்.
அவதாரமாய் அவதரித்து
அருளாட்சி செய்கின்ற
அச்சுதனே!
அவதார புருஷனே!
வணங்குகின்றோம் உன்னடியை.

*த . ஐங்கரதீபன்*
*யாழ் பல்கலைக்கழகம்*

**நம் தவறுகளை நாமே உணர்ந்து கொள்வதை விட**
**உயர்ந்த மனத்துணிவு வேறு கிடையாது.**
**-ஸ்ரீ அன்னை**

# இராமா மீளட்டும் உன் காலம்

விண்ணிற்கும் மண்ணிற்கும்
விரைந்தே பாலமிட்டு
கண்ணுக்குள் தருமமதை
தக்கதென உள்வைத்து
எண்ணிற்கும் எழுத்திற்கும்
ஒருவனாய் நின்றிட்ட
தசரதன் மைந்தா
மீளட்டும் உன்காலம்.

நீ
மண்ணுக்கு வந்தது
பொன்னையும் மண்ணையும்
போகப்பொருளாய்ப் பெண்ணையும்
போற்றி வாழும் மாந்தரின்
கீழ்மை அகற்றவன்றோ!

ஆம்!
உன்மனம்
மண்ணிற்காய் இரங்கியது
உன்பாதம்
மண்ணிற்காய் இறங்கியது

பெற்றெடுத்த அன்னை
சொத்தெனும் பிள்ளை
கத்தும் கடல் உலகில்
நித்தம் நிலை பெறுவான்
என்றே உரைத்தாய் நீ

மாற்றுத்தாய் எனினும்
தோற்காது அன்பென்று
காற்று வெளியில ஒரு
கூற்று வெளியிட்டாய்!

பற்றுடைய தந்தைக்கு
குற்றேவல் செய்து
கற்றல் நலன் பெருக்கி
கைகேயி
விற்ற செல்லுக்காய்
விரதம் இருந்தவன் நீ!

உதிரத்து உறவுகள்
உலகில் உலவும்முறை
அண்ணன் தம்பி யென
அணைக்கும் அன்பு முறை
அகிலம் காணவைத்தாய்

நட்புக்கு ஒரு செய்தி
உப்பு நிலமில்லா
கங்கை கரையினிலே
தங்கிய குகனுடன்

தங்காய் நீ அளித்தாய

காதல்வாழ்வுக்கு
காரிகை வந்துவிடத்
தாவுதல் இல்லாத
தாரமொன்று போதுமென
தாரக மந்திரம் தானுரைத்தாய்

பக்தி கொண்டால் போதும்
பரந்தாமனாய் உள்ளிருந்து
முத்தி தரும் உன் சக்திதனை
சத்திய அனுமானுக்கு
நித்தம் நீயுரைத்தாய்

குருவைப் போற்றுங்கள்
இருளைப் போக்குங்கள்
என்றே அடிதொடாந்து
படிமீது குருவருள்
பாராட்டி நின்றாய்

தர்மம் நிலை நாட்ட
அதர்மம் அழிவதுதான்
தக்கோர் முறையென்று
தரணிக்கு உரைத்தற்காய்
அசுரகுலமறுத்தாய்

நீதி அழிவதில்லை
நியாயங்கள் சோர்வதில்லை
ஆள்பவன் நானுண்டு
அல்லல் உமக்கெதற்கு என
சக்கரம் எடுத்தோனே
சக்கரவர்த்தி திருமகனே!
உன்னை மறந்தாரோ
தன்னை மறந்தாரோ
கண்ணை இழந்தாரோ
தடுமாறிப்போனாரோ

தாமதம் இனி வேண்டாம்
தரணி தாங்காது
மீளட்டும் உன் காலம்
ராமா! வாழட்டும் மனித இனம்
மண் மீது இதமாக.

**ஆக்கம் திருமதி ஜெ. கந்தவேள்**

# இதண்டி வரும் இதண்டு: இதண்டு பற்றிய ஒரு மொழியியல் நோக்கு

## 1. முன்னுரை

தமிழில் கிளைமொழி வழக்குகள் பல உள்ளன. உலக நிலையில், இலங்கைத் தமிழ் அவற்றுள் ஒன்று. ஆனால், பொதுவாக இலங்கைத் தமிழ் எனக் கூறினாலும் இங்கும் பல்வேறு பிரதேச வழக்குகள் உள்ளன. அவற்றுள் யாழ்ப்பாணத் தமிழ் என்பதும் ஒன்று. இது மற்றைய பிரதேச வழக்குகளைப் போல தனக்கெனத் தனியான சில மொழிக் கூறுகளைக் கொண்டுள்ளது.

கிளைமொழி அல்லது பிரதேச வழக்குகள் என்பதை அடையாளப்படுத்த உதவுவது பேச்சு வழக்கு. ஏனெனில், பேச்சு வழக்கு ஒரு மொழியின் உயிர்நாடி. அது ஒரு தேசத்து, பிரதேசத்து அல்லது இனத்தினது தனித்துவத்தினை வெளிப்படுத்தக்கூடியது. ஆயினும், ஒரு தனித்துவ வழக்கின் மொழிக்கூறுகள் அதனுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படுவதில்லை. அவற்றுக்கிடையில் பொது வழக்குகளும் இருக்கச் செய்கின்றன. அந்தவகையில் பொதுவாக இலங்கைத் தமிழிலும் சிறப்பாக யாழ்ப்பாணப் பேச்சுவழக்கிலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வரும் "இதண்டு" என்ற சொல் பற்றி இந்தக் கட்டுரை ஆராய்கின்றது.

## 2. வந்த வழி

'இதண்டு' என்ற சொல் எவ்வாறு பயன்பாட்டுக்கு வந்திருக்கும் என்பதை ஆராய வேண்டும். தமிழ் மொழி வரலாற்றில் சங்ககாலத் தமிழ் தொடக்கம் நவீன தமிழ் வரை இச்சொல் எழுத்து வழக்கில் இடம் பெறவில்லை. மாறாக இதனுடைய ஒலியமைப்பை ஒத்த சில சொற்கள் வழங்கி வந்துள்ளதை அறிய முடிகின்றது. இதண், இதணம் என்பவையே அச்சொற்கள்.

'இதண்டு' என்ற சொல் தொடர்பாக அகராதிகளில் தகவல் இல்லை. ஆனால், சுவாமி ஞானப்பிரகாசரது சொற்பிறப்பு அகராதியிலும் இதண், இதண்டு ஆகிய சொற்களே உள்ளன.

இதண், இதணம் என்பவை பெயர்ச் சொற்கள் இரண்டும் ஒரே பொருளை உடையவை காவற்பரண், பரண் என்பவற்றை அவை குறித்து நிற்கின்றன. பண்டைய இலக்கியங்களில் இச்சொற்கள் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

'வேங்கையங் கவட்டிடை நிவந்த இதணத்து' (அக 388:7)

"வரவழிச் செவ்வாய் குறத்தியர் இதணும்
மனையையும் தினையையும் வாரி............" (சீறா. 1:2:8)

இதண், இதணம் ஆகிய சொற்களுடனும் இவை கொண்டுள்ள பொருட்களுடனும் 'இதண்டு' என்ற சொல் தொடர்புபட்டதாகத் தெரியவில்லை.

சாதாரண பேச்சுவழக்கில் ஒருவர், இன்னொருவர் சொன்ன விடயத்தைச் சுட்டிக் கூறுமிடத்து 'அவன்

மார்க்கண்டன் ரூபவதனன்
விரிவுரையாளர்,
ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம்,
பதுளை.

இதெண்டுதான் சொன்னவன்' என்று கூறும் சந்தர்ப்பம் உள்ளது. இங்கு வரும் இதெண்டு என்பது 'இது என்ற' என்ற இரண்டு சொற்களில் கூட்டாக வரு வது. இங்கு 'இது' ஒருவர் கூறிய விடயம், பொருள் என்பவற்றைக் குறி த்தே வருகின்றது. 'என்று' என்பது இணைப்பிடைச் சொல். இது 'எண்டு' என்றே பயன்படுகின்றது. அந்த வகை யில் இதுஎண்டு என்பது புணர்ச்சி விதிக்கேற்ப புணர்ந்து இதெண்டு என வழங்கி வருகிறது. இது ஒலிய மைப் பில் 'இதண்டு' என்ற சொல்லுடன் தொடர்புடையதாயினும், 'இதண்டு' என்ற சொல் செய்யும் வேலையை அது செய்வதில்லை. இதண்டு வேறு பயன்பாட்டில் பயன்படுவது. 'இதண்டு' என்பதின் பயன்பாட்டுத்தன்மை வேறு.

பேச்சு வழக்கில் ஒருவரை இன்னொருவர் தன்பால் கவனிக்க வைக்க "இந்த இது" என்று கூறு வதை நாம் நடைமுறையில் அவதா னிக்க முடியும். "உங்களுடன் பேச அல்லது பரிமாற ஒரு விடயம் இருக் கிறது'' என்பதே இதன் பொருள். சில வேளைகளில் குறிப்பால் பொருளை உணர்த்தவும் இது பயன்படும்.

ஒருவர் பேசிக் கொண்டிருக் கும் போது, பேசிக் கொண்டிருக்கும் விடயத்தில் ஏதாவது விடயம் உடன் ஞாபகத்துக்கு வராவிட்டால் அல்லது மறந்திருந்த விடயத்தைக் கேட்ப வரிடம் / பெறுபவரிடம் இருந்து தெரிந்து கொள்வதானால் "இந்த இது" என்று கூறுவதுண்டு. சில சந்தர்ப்பங்களில் "அந்த அது" என்றும் பயன்படுத்துவ தும் உண்டு. இச் சிறு தொடர்கள் நேர டிப் பொருள்களை வெளிப்படுத்தா விட்டாலும் எவ்வாறு சூழமைவுக்கு ஏற்ப நின்று பொருள் கொடுத்துத் தொடர்பாடலைப் பூர்த்தியாக்குகின்ற னவோ அவ்வாறான ஒரு தொழிற் பாட்டைச் செய்யும் ஒரு சொல்லாகவே 'இதண்டு' என்பதும் வந்து சேர்ந்தி ருக்க வேண்டும்.

ஆக "இதண்டு" என்பது மொழியின் தொடர்பாடல் தேவையைப் பூர்த்தி செய்வதற்குக் காலம் அறிந்து, தேவை அறிந்து, சூழமைவுக்கு ஏற்பப் பயன்படுத்தப்படும் ஒரு சொல் எனலாம்.

### 3. பெயரா? வினையா?

'இதண்டு' எனும் சொல் பயன்ப டும் சூழமைவை உற்றுநோக்கிப் பார்க் கும்போது, அடிப்படையில் இது வினைச் சொல்லாகவே தொழிற்படுகின்றது.

உதாரணம் :

1. நீரீவியை இதண்டு

2. சோற்றை இதண்டிவிடு

3. நேற்றுச் சோறு இதண்டிப்போச்சு

இந்த வினைச்சொல்லைக் கொண்டு உருவாக்கக்கூடிய வினையால ணையும்பெயர் மற்றும் தொழிற்பெயர் களும் மிக மிக அருமையாகப் பாவனை யில் உள்ளன.

உதாரணம் : இதண்டினவள்
இதண்டினவனக் கூப்பிடு

போன்ற பிரயோகங்களை பேச்சு வழக் கில் அவதானிக்கமுடிகிறது. ஆனால், பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் 'இதண்டினவள்' என்ற சொல் வினைச் சொல்லாகவே பயன்படுத்தப்படுவதை நாம் அவதானிக்கின்றோம்.

உதாரணமாக, "அவள் இந்த அறைக் குள் நிண்டு ஏதோ இதண்டினவள்"

என்று கூறுவது வழக்கம். இங்கு இதண்டி னவள் என்பது பெயர் அல்ல வினை. யாழப்பாணத் தமிழில் எழுவாயாக வரும் மாற்றுப் பெயர்கள் பயனிலையுடன் இணைந்து வருவதைச் சாதாரணமாக அவதானிக்க முடியும்.

உதாரணம் : நாங்கள் போனனாங்கள் (நாங்கள் போனோம்)
நீங்கள் வந்தநீங்கள் (நீங்கள் வந்தீர்கள்)

இவற்றைப் போலவே அவள் இதண்டினவள் என்பதும் வந்துள்ளது. (அவள் இதண்டினாள்) இதண்டினவள் என்பது இதண்டினாள் என்பதின் இன்னொரு வடிவமே ஒழிய பெயர் அல்ல.

## 4. வினைச் சொல்லின் பண்புகள்

வினைச்சொல்லின் பண்புகளான காலங்காட்டுதல், வினையடைகளை ஏற்றல், ஏவுப் பொருளில் வருதல், செயலை உணர்த்தல், எச்சமாதல், திணை, பால், எண், இடவிகுதிகளைப் பெற்றுவருதல் முதலியவற்றை 'இதண்டு' என்பதும் கொண்டுள்ளது.

காலம் :அவன் இதண்டினான்
வினையடை : சட்டியை நல்லா இதண்டிவிடு
ஏவல் : நீ இதண்டு
எச்சம் : இதண்ட, இதண்டி என்ற எச்சங்களாக அமைதல்

மேற்கூறிய உதாரணங்களுடன் 'இதண்டு' ஏதோ ஒரு செயலை உணர்த்தி நிற்பதைக் காண முடிகிறது. வாக்கிய இயைபு வேண்டி திணை, பால், எண், இட விகுதிகளை வினைகள் ஏற்பதுபோல் ஏற்றும் வந்துள்ளது.

### 4.1. முதல்வினையும் கூட்டுவினையும்

'இதண்டு' எனும் வினை முதல்வினையாகத் தொழிற்படுவதை நாம் அவதானிக்கலாம்.

அவங்கள் எங்களைப் பிடித்து இதண்டினாங்கள். இங்கு 'இதண்டு' முதல்வினை.

சில துணைவினைகளுடன் 'இதண்டு' என்பதும் இணைந்து கூட்டு வினையாகத் தொழிற்படுகின்றது.

சோறு இதண்டிப் போச்சு
நீ அதை இதண்டிவிடு
இங்கு, இதண்டு போச்சு, இதண்டு விடு எனக் கூட்டுவினைகள் அமைந்துள்ளன.

### 4.2. செயப்படுபொருள் குன்றிய வினையும் செயப்படுபொருள் குன்றாவினையும்

தமிழில் உள்ள சில வினைகள் செயப்படுபொருளை ஏற்றும், சில வினைகள் செயப்படு பொருளை ஏற்காமலும், சில வினைகள் ஏற்றும் ஏற்காமலும் வழங்கி வருவதைக் காணலாம்.

உதாரணம் : (1) வீடு எரிந்தது

(2) அவன் வீட்டை எரித்தான்

ஆகிய வாக்கியங்களில் 'எரி' செயப்படுபொருளை ஏற்காமலும் ஏற்றும் வந்துள்ளதைக் காணலாம். இதேபோல 'இதண்டு' என்பது வழங்கி வருகின்றது.

(1) சோறு இதண்டிப்போச்சு
(2) நீ சோற்றை இதண்டிவிடு

மேற்கூறிய வாக்கியங்களில் முதலாவதில் செயப்படுபொருள் குன்றியும் இரண்டாவதில் செயப்படுபொருள் குன்றாமலும் வந்துள்ளதைக் காண முடிகின்றது.

சுழலும்.....



## பல்லவி

வளம்தரும் வல்லிபுர வல்லளார் ஆழ்வார்
உளம் தினம் பொங்கும் உனதடி தொழவே

- வளம் தரும் வல்லிபுர ஆழ்வார்

## அனுபல்லவி

கற்சிலை கோபுரம் நிகர்கலை தேரும்
அற்புதம் பகரும் ஊருயர் ஆலயம்

- வளம் தரும் வல்லிபுர ஆழ்வார்.

## சரணம்

வெண்மணல் நாற்றிசை வையகம் கொளிக்கும்
பண்ணிசை நாளும் பாடலாய் ஒலிக்கும்
நெற்றியில் நீறும் நாமமும் துலங்கும்
பொற்பத ஆழ்வார் பதியருள் கிட்டும்

- வளம் தரும்



அந்தணர் பூஜையும் ஆன்மீக உரையும்
செந்தமிழ் பாடலும் சைவநெறி ஞானமும்
இடர்தனை களையும் உன்னத தீபம்
சுடர்நலம் தருமே சிந்தையும் மலருமே!

- வளம் தரும்

*ஆக்கம்*

**வல்லையூர் கே.ஆர்.திருத்துவராஜா**
(கலைப்பரிதி)

பலவீனத்திற்கான பரிகாரம், பலவீனத்தைக் குறித்து சிந்திப்பதல்ல, மாறாக வலிமையைக் குறித்து சிந்திப்பதுதான்.

உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். இவை அனைத்திற்கும் மேலாக அன்பு வேண்டும்.


மனிதனுக்குள் ஏற்கனவே மறைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வி.



# கற்பனைத் திறனை

## வளர்க்க வல்லது இறை சக்தி

வல்லிபுர அடியவன்
**பு.கதிரித்தம்பி**



உயிரினங்களில் சிறப்புடைய பிறவி மானுடப் பிறவி ஒன்றேயாகும். இதைச் செந்தமிழ்ச்செல்வி ஔவையும், நாவுக்கரசனும், புகழ்ந்து போற்றியுள் ளனர். சிந்திக்காதவன் மனிதன் இல்லை என்பது அறிஞர் கூற்று. கற்பனை கொண்டு சிந்திக்கும் ஆற்றலுடைய மனி தன் கவிஞனாகவும், எழுத்தாளனாகவும், விளங்குகின்றான். தமிழ்க் காவியங்கள் படைத்த பாவலர்களும் எழுத்தாளர்களும் கற்பனை உலகில் வாழ்கின்றனர். இத னால் அவர்களுடைய படைப்புக்கள் என் றும் எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கின் றன. இதற்கு இறை சக்தியே ஊன்று கோலாகவுள்ளது.


தாயின் மடியில் தவழும் குழந்தை அம்மாவின் மொழி கேட்டு சிந்திக்க ஆரம்பிக் கின்றது. இந்நிலையில் அம்மா இனிய மொழிகளைக் கூறி மகவை மகிழ வைத்து உணவுகளை ஊட்டுகின்றாள். உணவோடு சேர்ந்து இன்மொழி கள் குழந்தையின் உள்ளத்தில் பதிக்கின்றன. குழந்தையின் மூளை வளர்ச் சிக்கு கற்பனை வளம் மிகவும் இன்றியமையாதது என விஞ் ஞானிகள் கூறுகின்றனர். கற்பனை வளம் சிறுவர் உள்ளத்தில் கல்லில் பதித்த எழுத் துப் போல பதிந்து விடுகின்றன. எனவே பாலர் வகுப்புகளில் கற்பனைக் கதைகள் சொல் வதைக் கேட்கின்றோம். பாலர் வகுப்பில் “காகமும் வடையும், கோழியும் எலிகளும் போன்ற கதைகளைச் சொல்லிக் கொடுக் கின்றார்கள். நரியின் தந்திரத்தையும், கோழியின் நற்புத்தி களையும் மாணவர் மனதில் பதியச் செய்து, ஏமாற்றுபவர் செயலையும், உழைத்து உண்ண வேண்டு மென்ற மனப்பாங்கையும் ஏற் படுத் துகின்றது. குழந்தைகள் உள்ளங்களில் நாளும் பொழுதும், கற்பனை வளம் பெருகப் பெருக சிந்திக்கும் ஆற்றல், வாய்க்கால் மடை திறந்தால்போல் பெருக் கெடுத்து ஓடும். குழந்தை கவிஞனாகவும், பெரும் எழுத்தாளனாகவும் விஞ்ஞானியா கவும் வரும் சந்தர்ப்பம் ஏற்படும். காள மேகம், ஒட்டக் கூத்தர், ஔவையார், திருவள் ளுவர், கம்பர் போன்ற கவிஞர்களும் காவி யங்களைப் படைத்து தமிழை வளர்த்தனர். அன்று அவர்கள் இல்லாதிருந்தால் இன்று தமிழ் நிலை என்னவாக இருக்கும். தற் காலத் தில் பாவனையில் ஒட்டக்கூத்தர், காளமேகம்

போன்றோர் கவிதைகள் மக்கள் வாழ்வில் அருகி வருகின்றன. வள்ளுவன் செய்த திருக்குறளினால் உலகம் உய்ய வழி ஏற்பட்டது. இதை சுப்பிரமணிய பாரதியார், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது தமிழ் நாடு" என்று பாடியுள்ளார். ஒளவையாரின் கவிதைகளும் பாலர்களுக்கு ஏற்றனவாக அமைந்துள்ளன. உதாரணமாக அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று இதுபோன்ற உயிரெழுத்துக்கள் பன்னிரண்டையும் முதல் எழுத்தாக அமைய வடித்துள்ளார். மக்கள் இன்றும் விரும்பிப் படிப்பதனால் கம்ப இராமாயணம் நிலைபெற்று விளங்குகின்றது. கம்பனின் கற்பனை நயம் மக்கள் உள்ளங்களை பறிக்கின்றது. உதாரணமாக "இராமன், சீதை, இலக்குமணன் வீதி வழியே செல்கின்றனர். காற்றினால் இலைகள் ஆடி அசைகின்றன. இவற்றை கம்பன் " ஒல்லை வாவென்று அழைப்பன போன்றன மரங்களே" என நயம்பட வைக்கின்றனர். இராமாயணத்தில் பல இடங்களில் கற்பனைகளை சிதறவிட்டுள்ளான். இராமனில் அழகை எவ்வாறு வர்ணிக்கிறார். "காலே கண்டார் காலே கண்டார், தோளே கண்டார், தோளே கண்டார்" வேறு அவயவங்களைப் பார்க்க முடியாமல் போய்விட்டது என நினைத்து மனம் வெதும்பி அழுவது போல நயக்கக் கூறுகின்றனர். கம்பனால் இராமாயணம் பொலிவுற்றது என்று கூறினாலும் மிகையாகாது.

மக்கள் தற்பொழுது விஞ்ஞான உலகில் அளப்பரும் விஞ்ஞானப் படைப்புகளை கண்டு களித்துக் கொண்டிருக்கின்றனர். எங்கும் எவையிலும் விஞ்ஞானம். உலகம் கைக்குள் வந்துள்ளது. வெகு தொலைவில் உள்ளவருடன் நொடிப் பொழுதில் கதைக்கின்றோம். வெகு விரைவாகச் செல்லும் றொக்கட்டுக்கள், இலக்கை தானே அறிந்து தாக்கும் ஏவுகணைகள் என பல விஞ்ஞான கண்டு பிடிப்புகள் நாளாந்தம் நடைபெறுகின்றன. ஆனால் விஞ்ஞானிகளால் உடம்பிலிருந்து பிரித்த உயிரை மீட்கவும் உயிரை உடம்பில் செலுத்தவும் முடிய வில்லை.

இறை சக்தியால் மாத்திரம் உயிரை மீட்ட சாவித்திரியையும், இள மைப் பருவம் பெற்ற திருநீல கண்டனையும், ஏழு நாட்கள் உணவின்றி சுண்ணாம்பு அறையில் அடைபட்டு இறவாது பூரிப்புடையவராக இருந்த அப்பரையும் சைவ சமய வரலாறு எடுத்து இயம்புகின்றது. எனவே இறைவனை சேக்கிழார் "கற்பனை கடந்த சோதி" என்னும் முதலையுடைய பாடலால் உணரவைக்கிறார். மனிதன் பிறந்த பிறவியின் பலனை அடைவதற்கும், சிறந்த வாழ்க்கையை அமைக்கவும் இறைசக்தி வேண்டு மென்பது வெள்ளிடைமலை.

ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்
பல்பொருள் மொத்த வியாபாரம்



பஸ்நிலையம்,
பருத்தித்துறை.
T.P : 021 226 3284

# இளமையும் சமயமும்

வாழ்வு இனிமையாக அமைதல் வேண்டும். உலகிலே அநேகருடைய வாழ்வு துன்பமாக அமைந்திருப்பதைப் பார்க்கின்றோம். வாழ்வை இனிமையாகச் செய்து கொள்வது அறிவுடைமை. ஒரு கட்டிடத்திற்கு அத்திபாரம் மிக முக்கிய மானது. அத்திபாரம் ஆடினால் கட்டிடம் இடிந்து விடும். அதுபோல மனித வாழ் வுக்கு இளமைப் பருவம் அத்திபாரமாகத் திகழ்வது. இளமையில் பழகும் பழக்கம் இறுதிவரை நிலைக்கும்.



இளமைப் பருவம் இனிமையானது. மானிட வாழ்க்கையின் வளமான பரு வம். மனித வாழ்வினைச் செப்பனிடும் பகுதி. இள மைப் பருவத்தின் ஒரு பகுதி மாணவ வாழ்க்கையில் கழி கின்றது. மாணவர் வாழ்க்கை பிறரின் வாழ்க்கை யிலிருந் தும் வேறுபட்டதாகும். கல்வி யும் ஒழுக்கமும் மாணவனுக்கு இரு கண்கள் போன்றதாகும். இன்றைய இளைஞர்கள் எதிர்காலத் தலைவர்கள். இவர்களே, ஆசிரியர்களாக, வைத்தியர்களாக, பொறி யியலாளராக, கலைஞர்களாக, விஞ் ஞானிகளாக, சமயத் தலைவர்களாக, சமூகத் தொண்டர்களாக விளங்கப் போகி ன்ற உணர்வும் உறுதியும் ஒவ்வொரு இளைஞனுக்கும் இருக்க வேண்டும்.

இந்து சமயம் அன்பு, அறிவு, அறம் என்னும் மூன்று தத்துவங்களை உள்ளடக்கி யுள்ளது. இந்து இளைஞர்கள் சமயத்தில் பற்றுடையவராக இருக்க வேண்டும். தமது சமய நெறியை மதிக்க வும், போற்றவும் முன்வரவேண்டும். 'அன்பே சிவம்' என்றார் திருமூலர். எங் கெல்லாம் அன்பும், அறிவும் தொண்டும் இடம் பெறுகின்றதோ அங்கெல்லாம் இறைவன் இருக்கின்றான். அந்தச் சிவத்தை நோக்கியே இளைஞர் சமு தாயம் செல்ல வேண்டும்.

இந்து சமயம் வளர வேண்டுமா யின் அதனை ஆதரிப்பவர்கள், வளர்ப்ப வர்கள் உள்ளம் தெளிவாக இருக்க வேண் டும். காலாச் சூழலால் சமயத்தை ஆதரிப் பவரும் வளர்ப்பவரும் பெருகுவார்கள். இத னால் சமயத்தை வளர்த்துவிட முடியாது. அதே சூழலால் பெருகியது போல குறைந்து விடும். காலச் சூழலால் மாறியவர்களை விட இந்து சமயப் பற்றின் சூழலில் வாழும் இளம் உள்ளங்களே சிறப்புடையது. இந்த இளம் உள்ளந்தான் சமயத்தை வளர்க் கும். வாழச் செய்யும். இளம் உள்ளத்தில் ஊற்றெடுத்த சமயப் பற்றுத் தான் பல்லா யிரக் கணக்கான உள்ளங்களைப் பற்றுக் கொள் ளச் செய்யும். காலச் சூழ் நிலை மாறிய போதிலும் அவ் வுள்ளம் மாறாது. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற பழ மொழிக்கேற்ப எவ ரொருவர் தனது வாழ்விய லைக் குறிக்கோளுடன் அமைக்கின்றாரோ அதுவே வயது முதிர்ந்த காலத்திலும் செய்யப் படும்.

இந்து சமயத்திற்கு இளைஞர்கள் ஆற்ற வேண்டிய பணியை நோக்குமிடத்து சம்பந்தர் பெருமான் நினைவே முன்நிற் கின்றது. சம்பந்தரின் இளம் உள்ளத்தில் படிந்த சைவப் பற்றுத்தான். பல உள்ளங் களைச் சைவத்திற்குத் திருப்பியது. சைவ சமயத்திற்கும் செம்மொழித் தமிழிற்கும் சம்பந்தர் ஆற்றிய பணிகள் போற்றத்தக்கன. சைவ சமயத்தின் மறுமலர்ச்சியும் காலத் திற்கேற்ற கருத்துப் புரட்சியும் செய்த பெருமை சம்பந்தரைச் சாரும். "மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள் விரைந்து வம்பின்" என்ற அறை கூவல்

இவரின் இளமைப் பருவத்தின் ஆளுமைத் திறத்திற்குத் தக்கசான்று. பக்தி இலக்கியத்திற்குப் பங்களிப்புச் செய்த சுந்தரரும் ஆண்டாளும் கூட இளைஞர்களாகவே சித்திரிக்கப்படுகின்றனர். நவீன இந்து சமய சீர்திருத்த இயக்கத்தை முன்னெடுத்துச் சென்ற ராஜாராம் மோகன்ராய், தாயனந்த சரஸ்வதி போன்றோரும் இளைஞர்களாகவே இருந்துள்ளனர். 'எழுமின் விழிமின் குறிக்கோளை அடையும் வரை பணி செய்மின்' என வீர இந்து இளைஞர்களை நோக்கிக் குரல் கொடுக்கும் விவேகானந்தரும் ஓர் இளைஞனே. நவீன சீர்திருத்த சிந்தனைகளோடு பழைய மரபு பேணவும் ஆன்மீக நாட்டம் கொள்ளவும் விழுதுகளாக விளங்கியவர்கள் இந்து இளைஞர்களே.

இன்றைய சூழ்நிலையில் இளைஞர்களின் உள்ளம் இந்து சமயப் பற்றிலிருந்து விலகியதாகவே இருக்கின்றது. சமய வாழ்வினை நடாத்துவதற்குரிய சூழ்நிலையில் பெரும்பாலான இளைஞர்கள் வாழவில்லை. ஐம்புலன்களுக்கும் இன்பமளிக்கும் வெளியுலகப் பொருள்களில் அவர்களின் உள்ளம் நாட்டம் கொண்டுள்ளது. புறவாழ்வினை நடாத்த இளைஞர்களுக்கு இன்றைய உலகம் துணை செய்கின்றது. ஆனால் அக வாழ்வினை நடாத்தத் துணை செய்வதாக இல்லை.


இளைஞர் உள்ளம் சமயத்தில் பற்றுக் கொள்ளும் வண்ணம் சூழ்நிலைகளை மாற்றியமைக்க வேண்டும். வெளியுலக மோகம் அவர்களின் உள்ளங்களை ஈர்க்கா வண்ணம் வாழச் செய்ய வேண்டும். உள்ளம் தூய்மையுடன் விளங்கும்போதுதான் சமயப் பற்றை வளர்க்க முடியும். கட்டுப்பாடான எளிய வாழ்க்கை, புலன்களை வெளியுலக ஆடம்பரங்களில் ஈடுபடுத்தாமை, சமயப் பெரியார்களுடன் உறவு பேணல், இறை வழிபாட்டில் ஈடுபடல், இயற்கைச் சூழலுடன் மனம் ஒன்றப் பழகுதல் ஆகியவற்றை இளைஞர்கள் பற்றுக் கொள்ளும் வகையில் கல்வி முறையை அமைத்தல் வேண்டும். பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கற்பிக்கப்படும் கல்வி புற வாழ்வினை நடாத்தத் துணை புரிகின்ற தோயன்றி அகவாழ்வினை நடாத்துத் துணை புரியவில்லை. அன்றைய இளைஞர்களுக்கு உள்ளம் பண்பட சமயக் கல்வியும் மூளை வளர அறிவியற் கல்வியும் கற்பிக்கப்பட்டன. உள்ளம் பண்பட்ட காரணத்தால் சமயத்தில் பற்றுக் கொண்டு சிறந்த அகவாழ்வு நடாத்தினார்கள். அறிவியற் கல்வியைப் பெற்றதனால் புறவாழ்க்கையில் சிறந்த பங்கு கொண்டு உயர் வாழ்க்கை நடாத்தினார்கள். ஆனால் இன்றைய கல்வி நிலை இத்தகையதாக இல்லை. உள்ளத்திற்கும் மூளைக்கும் தகுந்த கல்வியை இளைஞர்களுக்கு அளித்தால்தான் சமயம் வளரும்.

சமயம் வாழ்க்கையோடு தொடர்புடைய ஒன்று, புறவாழ்வில் துன்பப்படும் மனம் அகவாழ்வோடு தொடர்புடைய சமயத்தில் அமைதி காண்கின்றது. 'இளமையிற் கல்' என்ற முதுமொழிக்கேற்பச் சமய உணர்வும் இளம் உள்ளத்திலேயே பதியப் பெற வேண்டும். இவ்விடத்தில் இராம கிருஷ்ண பரம ஹம்சரின் கூற்றைத் தருவது பொருத்தமானதாகும்.

"முற்றாத மூங்கிலை எளிதில் வளைக்கலாம். முற்றின மூங்கிலைப் பலவந்தமாக வளைக்க முயன்றால் ஒடிந்து போகும். அதுபோல இளமையான மனத்தை இறைவனிடம் செல்லும்படி திருப்புவது எளிது. வயது முதிர்ந்தவனுடைய பழக்கப்படாத மனமோ அப்படித் திருப்ப முயலும் போதெல் லாம் பிடியை மீறிச் செல்லும் சமயம் மனிதனுக்கு அடிப்படையானது. அவ்வடிப்படை இளைஞர் உள்ளங்களில் எழுதப்பட வேண்டும். அதற்குரிய சூழலை உருவாக்கித் தரவேண்டும். அப் பொழுதுதான் சமயத்தில் இளைஞர்களுக் குப் பற்று ஏற்படும். சமயமும் வளரும்.

**திருமதி. நந்தகுமாரன் செல்வ அம்பிகை**
சிரேஸ்ட விரிவுரையாளர், தமிழ்த் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# நெஞ்சக்குமுறல்



என் நெஞ்சம் தனிலே ஏனோ தெரியவில்லை
என்னவர்களை எண்ணி எண்ணற்ற வேதனைகள்
வேதனைகள் கண்ணிலே வெளிவருகின்றன கண்ணீராய்
வெளியிலும் சொல்லவும் முடியாது மெள்ளவும் முடியாது மௌனமாகக்
குமுறுகின்றேன்

குமுறல்களை அடக்க முடியவில்லை
குழுமி நின்று கதைக்கவும் முடியவில்லை
கூட்டம் கூடி நின்றாலும் கூண்டுகளில் தள்ளப்படுகின்றோம்
தள்ளப்பட்டாலும் பரவாயில்லை கொல்லப்படுவது ஞாயமா?
உயிர் வாழ எமக்கு உரிமை இல்லையா?

இல்லை இல்லை என்று இன்று எம்நாட்டில்
இனங்களாகப் பிரித்தும் இன்னும் விடிவில்லை
இனியும் விடிவில்லையா? விதியைத் தேடிப்பயணிக்க
விதியிலும் எழுதவில்லை. விளங்காத எம் வாழ்க்கை
விடுகதையாய் ஆனதா?

ஆனது ஆகட்டும் என்று ஆயிரமாயிரம் ஜென்மங்கள்
அடிபட்டே வாழ்கின்றோம் அடிமைப்பட்டே வாழ்கின்றோம்
உடமையை இழந்தும் உரிமைகள் கிடைக்கவில்லை
கிடைத்த சுதந்திரம் கிட்டாத கனியாகி

நெருங்கமுடியாத நெருப்பிடம் நொந்து நடக்கின்றோம்
மண்ணில் தமிழினை செம்மொழியாய்ப் பெற்றும்
தலை நிமிர்ந்து நிற்க இடமில்லை
தமிழரின் தாகத்தில் தன் மண்ணும் கிடைக்கவோ வழியில்லை

கலாசாரம் காணாமல் போவது எப்படி
சிந்திக்க எவருமில்லை திருந்தவும் வழியுமில்லை
தமிழரின் கலாசாரம் தலைகுனிந்து நிற்கிறது
தரங்கெட்டு நடக்கும் தமிழர்களைப் பார்த்து
கைகளில் கைபேசியும் கால்குறை உடைகளும்

காதலிக்க ஒருவனோ ஒருத்தியோ
கைப்பிடிக்க ஒருவனோ ஒருத்தியோ
என்று வாழும் அளவுக்கு வளர்ந்துள்ளது எம் கலாசாரம்
இனங்காண முடியுமா? இவர்கள் எப்படியென்று
எதிர்காலம் என்னவென்று எவராலும் கூறமுடியுமா?
எப்போது வரும் எங்கள் கலாசாரம்?
காணவில்லையே தமிழரின் கலாசாரத்தை
விடிவுகளும் இல்லையே - எம் வாழ்வில்
உள்ள வானம் எப்போதுதான் விடியுமோ



தாரகா சிவசிதம்பரம்
முள்ளியவளை


# தமிழ்த் திரைப்படங்களின் இன்றைய நிலை

- ஜெனார்த்தனி ஜெகதீஸ்வரன்-

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த 21ம் நூற்றாண்டில் பல்வேறுபட்ட நவீன தொழிநுட்ப சாதனங்களை சிறுவர்கள்முதல் பெரியவர்கள் வரை அவர்களின் கைககளில் கைக்குழந்தைகள் போல் தவன்று வருவதனை கண்ணூடாக காணமுடிகின்றது. இவற்றை பயன்படுத்தி இவர்கள் திரைப்படம் பார்ப்பது என்று பல வகைகளிலும் தங்களைத் தாங்கள் வளர்த்துக்கொள்வதாக எண்ணி தம்மைத்தாமே குழி தோண்டிப் புதைக்கும் செயல்களில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக இவற்றைச் செய்வது இளைஞர்கள் என்பது மனவருத்தத்துக்குரிய விடயமாகும். அந்த வகையில் தமிழ் திரைப்படங்களின் இன்றைய நிலையை நோக்குவது பயனுடைய செயலாகும்.

திரைப்படம் என்பது ஆற்றல் வாய்ந்த கட்புலக்கலைகளில் ஒன்றாகும். தமிழ்த் திரைப்படக் கலையானது 1930ம் ஆண்டு அறிமுகமானது. இது தொழில் நுட்ப வளர்ச்சி, ஆற்றுகை வளர்ச்சி என்பவற்றால் பல்பரிமான நிலையை அடைந்துள்ளதை காண முடிகின்றது. வெறுமனே பொழுது போக்கு ஊடகமாக மாத்திரமன்றி சமூகத்தின் போக்கைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் காணப்படுகின்றது.

1930ம் ஆண்டு வெளிவந்த "மகாகவி காளிதாஸ்" என்ற திரைப்படத்துடன் தமிழ்த்திரைப்பட வரலாறு ஆரம்பித்து இன்றுவரை இயங்கிக் கொண்டிருக்கின்றது பல நூறு திரைப் படத் தயாரிப்பு நிறுவனங்கள், பல நூறு இயக்குனர்கள், ஒளிப்பதிவாளர்கள், இசையமைப்பாளர்கள், உதவி இயக்குனர்கள் முதலான பல் துறைக் கட்டமைப்புடன் தமிழ்த் திரைப்படக் கலை இயங்கி வருகிறது வலுவான திரைக்கதையுடனும், அற்புத மான இயக்கத்துடனும் தமிழ்த் திரைப்படங்கள் வெளிவந்த காலம் ஒன்று உண்டு. இது குடும்பக்கதையாக இருந்தாலென்ன, மண்வாசனையாக இருந்தாலென்ன, நகரத்து சிக்கல்களை வெளிப்படுத்தும் கதையாக இருந்தாலென்ன,



நேர்த்தியான இயக்கத்துடனும் உயர் தரமான இசையமைப்புடனும் ஆபாசமற்ற வசணத்துடனும் அன்றய திரைப்படங்கள் வெளிவந்தன.

ஆனால் இன்றய நிலையில்

திரைப்படக்கலை தனக்குரிய சிறப்பையும், தகுதியையும் தக்க வைத்துக் கொண்டுள்ளதா..? ஏன்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும் நவீன தொழில்நுட்பம் ஏனைய துறைகளைப் போலவே திரைப்படத்துறைக்குள்ளும், தன் நீள்கரங்களை நுளைத்து விட்டது கதை அம்சமே இல்லாத திரைக்கதை, காதைச் செவிடாக்கும் இசை, புரியாத வரிகளுடன் பாடலகள், ஆபாசமான இரட்டை அர்த்தமுள்ள வசனங்கள் தனி மனிதர் துதிபாடல், வன்முறை என்று இன்றய இளைய சமுதாயத்தை குட்டிச் சுவராக் கும் நோக்கத்துடனும், வியாபார நோக்கத்துடனும் இன்றைய திரைப்படங்கள் இழிவான நிலையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது குடும்பத்தோடு உட்கார்ந்து பார்க்கமுடியவில்லை என்று பலரும் குறை கூறும் அளவிற்கு இன்றய திரைப்படத்துறை தரம் குறைந்து விட்டது என்பது வெளிப்படை

இன்றைய தமிழ்த்திரைப் படங்கள் பெண்களை இழிவான நிலையில் சித்தரிக்கும் தன்மை கொண்டனவாக அமைகின்றன என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. பண்பாட்டு




உணர்வினை வணிக நோக்கத்துடன் தயாரிக்கப்படுகின்ற திரைப்படங்களே இன்று அதிகம் வெளியாகின்றன மிகக்குறைந்த அளவிலான உடையுடன் கதாநாயகி, ஐந்து பாடல்களும், வன்முறையுடன் கூடிய சண்டைக் காட்சிகள் இரட்டை அர்த்தம் கொண்ட நாகரிகத்தை மீறிய நகைச் சுவைக் காட்சிகள், நம்பமுடியாத அளவிற்கு கதா நாயகன் பற்றிய சித்தரிப்புகள் என்பன வற்றுடன் ஒரு படம் தயாரித் தால் வெற்றிபெறும் என நம்புகின்றனர் இளைஞர்கள் தமது அபிமான நாயக னின் திரைபாடம் வெளியாகுமெனின் அது வெற்றிப்படமாக வேண்டும் என் பதற்காக அவர்களின் உருவப்படம் வரைந்து பாலால் அபிசேகம் செய்தல், தோரணங்கள் கட்டுதல், பொங்கல் செய்தல் போன்ற மடமைத்தனமான செயல்களில் ஈடுபடுகின்றமை அவர்களின் மத்தியில் திரைப்படச் செல்வாக்கு என்னிலையில் உள்ளது என்பதை குறிக்கின்றது

மேலும் இளைஞர்களும் சரி, யுவதிகளும் சரி திரைப்படங்களைப் பார்த்து அதில்வரும் நாயகன், நாயகி என்போரைப் போன்று அதாவது அவர் களின் நடை, உடை, பாவனையை கைக் கொண்டு சமூகத்தை சீர்கெட்ட சமூக மாக மாற்றிக் கொண்டு இருப்ப தனை கண்ணூடாக காண்பது வருத்தம் தரும் விடயமாகும்.

இளைஞர்கள் எல்லோரும் கைகளில் ஆயுதங்களுடனும், கண்களில் கொலைவெறியுடனும் தாதாக்களாக வலம் வரும் அளவுக்கு தமிழ் திரைப் படங்கள் தரம் தாழ்ந்து விட்டதே என்பது உண்மை இவ்வாறான திரைப்படங்களை இயக்கும் இயக்குனர்கள் ஒருபுறம் இருக்க ஒரு சில இயக்குனர்கள் தமிழ்த் திரைப் படக்கலையை உன்னத நிலைக்கு இட்டுச் செல்வதில் பெரு முயற்சி காட்டு கின்றமையும் ஆறுதலளிக்கின்றது. அனைத்து இயககுநர்களும் இதைக் கருத்தில் கொண்டு செயற்ப்பட்டாலும், தமிழில் தரம்வாய்ந்த இலக்கியங்கள், நாவல்கள், சிறுகதைகள் உள்ளன. அப்படைப்புக்களை திரைப்படமாக்கு கின்ற செயற்பாடுகளை முன்னெடுகக்ப் பட்டாலும் மிகச் சிறந்த திரைப்படங் களை நாம் எதிர்பார்ப்பது மட்டுமலாமல், அதற்கு அடிமைப்பட்டுள்ள சமுதாயத் தையும் மிட்டு மிண்டும் நல்லதொரு சமுதாயத்தை உருவமைக்கலாம் என நம்புகின்றேன்.


# "விண்வெளி ஆய்வின் ரகசியங்கள்"

*"விண்வெளிப் பயணங்கள் வெற்றியடையாவிட்டால் ஒரே நாளில் நாம் நூறு ஆண்டுகள் பின்நோக்கி நகர்ந்து விடுவோம்.................."*

– க.கஜீபன்
மொரட்டுவ பல்கலைக்கழகம்.

இன்றைய உலகைப் பொறுத்தளவில், எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. இந்நிலையில் விண்வெளிக்கு ரொக்கெற் (Rocket) அனுப்பவும், விண்வெளியில் ஆராய்ச்சி மேற்கொள்ளவும் கோடிக்கணக்கில் மக்களின் வரிப்பணம் செலவழிக்கப்படுகிறது. அப்பணத்தை ஓர் நிலையான அபிவிருத்திக்கோ அல்லது உலகளாவிய ரீதியில் உள்ள ஏழை மக்களின் வயிற்றுப் பசியினை போக்குவதற்கோ பயன்படுத்தலாமே? இவ்வாறான கேள்விகள் ஒவ்வொரு முறையும் வெற்றிகரமாக விண்வெளிக்கு ரொக்கொற்றை அனுப்பும் போதெல்லாம் ஒருசார் மக்களால் கேக்கப்படுகிறது. இவ்வாறு வெற்றிகரமாக விண்வெளிக்கு ரொக்கற்றை அனுப்பும் போதே இத்தனை கேள்விகள் என்றால், அந்த முயற்சி தோல்வியில் முடியும் போது எத்தனை எதிர்ப்புகள்....

எனினும், இத்தனை எதிர்ப் புக்களையும் தாண்டி, அமெரிக்கா ஏன் ஆறு முறை நிலவுக்கு மனிதனை அனுப்பியது. தொடர்ந்தும் செவ்வாய்க்கும் ஏனைய பிற கிரகங்களிற்கும் ஏன் ரொகக்கெற்றுக்களை அனுப்பிக் கொண்டிருக்கிறது. ஏன் ரஷ்யா, சீனா நிலவுக்கு மனிதனை அனுப்புவதில் இவ்வளவு தீவிரமாக போட்டியிடுகின்றன.



உலகில் காரணம் இல்லாமல் எந்த செயலுமே இல்லை. உலக நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு விண்வெளி நோக்கி நகர்வதற்கு சில இன்றியமையாத, பெறுமதியான காரணங்கள் உண்டு. இன்று இந்த பூமியில் கிடைத்துக்கொண்டிருக்கும் எல்லா பொருட்களிற்கும் என்றோ ஒருநாள் நிச்சயமாக தட்டுப்பாடு ஏற்படும். அவ்வாறு தட்டுப்பாடு ஏற்படும் என்று இன்று முதலிலுள்ள பொருள் மசகு எண்ணெய். நிச்சயமாக இன்னும் சில வருடங்களில் நிலத்துக்கு அப்படியிலுள்ள மசகு எண்ணெய் வளம் முற்றிலும் தீர்ந்துவிடும். அவ்வாறு மசகு எண்ணெய் வளம் தீர்ந்துவிடும். அவ்வாறு மசகு எண்ணெய் வளம் தீர்ந்துவிட்டால், உலகிலுள்ள அனைத்து போக்குவரத்துக்களும் முடக்கிவிடும். அவ்வாறு ஒருநாள் போக்கு வரத்து முடங்கிவிட்டால், அந்த ஒரு நாளிலேயே கிட்டத்தட்ட நூறு ஆண்டுகள் பின்னோக்கி நகர்ந்து விடுவோம். அந்த நிலையில் மசகு எண்ணெய்க்கு பதிலாக ஒரு மாற்று எரிபொருள் இருந்தால் மட்டுமே இந்த பூமி தொடர்ந்தும் உருண்டு கொண்டிருக்கும்.

இன்று வரை மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் படி மசகு எண்ணெய்க்கு மாற்றாக இருக்கும் ஒரே ஒரு எரிபொருள் அல்லது வருங்கால தலைமுறை மக்களுக்கு பெற்றோலுக்கு நிகராக இருக்கப்போகும் எரிபொருள் ஹீலியம் -3 வாயுதான். ஹீலியம் - 3 வாயுக்கள் புவியில் மிக மிக அரிதாகவேதான் இருக்கின்றன. ஆனால் நிலவின் மேற்

பரப்பில் குறிப்பிட்ட இடங்களிலோ அல்லது வேறு கிரகங்களிலோ ஹீலியம் - 3 வாயுக்கள் அதிகம் இருக்கலாம் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். அவ்வாறு நிலவில் ஹீலியம் வாயுக்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுவிட்டால், அதனை அங்கிருந்து பூமிக்கு கொண்டுவந்து எதிர் காலத்தில் பெற்றோலுக்கு பதிலாகப் பயன்படுத்த முடியும். ஹீலியம் 3 வாயு பாவனையால் வளி மண்டலம் மாசடைவதும் இயன்றளவு குறைக்கப்படும். மேலும் விண்ணோக்கி புறப்படும் ரொக்கேற்றுக்கள் நிலவில் தரையிறக்கப்பட்டு எரிபொருள் நிரப்பிக் கொண்டு தொடர்ந்தும் நெடுந்தூரம் பயணிக்க முடியும். இதன் மூலம் இன்று இருண்டு காணப்படும். பால் வளி மண்டலத்தில் சூரியனுக்கு அப்பாலுள்ள பல சூரியமண்டலங்கள் வெளிச்சத்துக்கு வந்துவிடும்.

எனினும் எரிபொருள் தேவைக்காக மட்டும் விண்வெளி ஆய்வுகள் மேற்கொள்வதில்லை. நாளுக்கு நாள் அதிகரித்துவரும் கனிய வளங்களின் நுகர்வினால் என்றோ ஒரு நாள் அவை முற்றாகவே தீர்ந்துவிடும். அவ்வாறு தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் அவை அந்த கிரகத்தில் கிடைக்கிறதோ. அங்கிருந்து அவற்றை பூமிக்கு கொண்டு வரவும் தான் மேற்கொள்ளப்படுகிறது. பூமியில் நாடுகளிற்கு இடையே எல்லைகள் இருப்பது போல் விண்வெளியில் எல்லைப்படுத்த முடியாது. திறமையும், தொழில்நுட்பமும் உள்ள யார் வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் சென்று எதையும் எடுத்து வரலாம். இதனாலேயே தான் ஒவ்வொரு நாடும் போட்டி போட்டுக் கொண்டு விண் வெளிக்கு மனிதனை அனுப்புவதில் முனைப்புக் காட்டுகின்றன.

எனினும் விண்வெளிப் பயணம் இலகுவானதல்ல, அதில் மிகப்பெரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டும். பூமியின் வளி மண்டல எல்லையை தாண்டியதுமே சவால்கள் ஆரம்பித்துவிடும். புவிவளி மண்டலத்துக்கு வெளியே வெப்பநிலை, அமுக்க குறைவாகவே இருக்கும். இப்படிப்பட்ட அமுக்கம் குறைந்த இடத்தில் வெற்றிகரமாக பயணிக்க வேண்டும். எனில், புவியிலேயே வெற்றிடத்தை உருவாக்கி ரொக்கெற்றினை நன்கு சோதனை செய்திருக்க வேண்டும். இவ்வாறான சோதனை களில் ஈடுபடாததால் தான் இந்தியாவின் முதலாவது "கிரையோ ஜெனிக் எஞ்சின்" ரொக்கெற் தோல்வியில் முடிந்தது. மேலும் வேற்றுக் கிரகத்தினுள் நுழையும் போது அதன் ஈர்ப்பு விசை சவாலாக அமையும். அவ்ஈர்ப்பு விசையை கணிப்பதில் அணு அளவேனும் தவற



"அந்த வீட்டில் திருடப் போனது தப்பாப் போச்சு."

"என்னாச்சு?"

"ரெண்டு குழந்தைகளை ஸ்கூலில் சேர்த்துட்டு செலவுக்குக்கூட காசில்லாமல் திண்டாடிக்கிட்டிருந்தாங்க; என்னிடமே ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிட்டாங்க!"

ஏற்படின் ரொக்கெற்றினை தரை இறக்கும் போது, அதன் ஈர்ப்பு விசையால் ஈர்க்கப்பட்டு அதனுடன் மோதி வெடித்து விடும். ஆளில்லா விண் கலத்தை அனுப்பும் போதே இவ்வளவு சவால்கள் எனின், மனிதனுடன் ரொக் கொற்றை அனுப்ப வேண்டும் எனின், அவருடைய பாதுகாப்பும் ஒரு சவால் தான், அதுவும் அவர் விண் கலத்தை விட்டு வெளியே வரவேண்டும். எனின், அவர் மிகவும் பாதுகாப்பான விண்வெளி உடை அணிந் திருக்க வேண்டும். ஏன் எனில் விண்வெளி யில் மிகப்பெரிய சவால் புற ஊதாக் கதிர்களின் தாக்கம் புவியைச் சூழ ஓசோன் படலம் இருப்பதால் புவி மேற் பரப்பை புற ஊதாக்கதிர்கள் அணுகு வதில்லை. ஆனால் விண்வெளியில் அது மனித னுக்கு மிகப்பெரிய சவால். மேலும், சுவாசத்திற்குத் தேவையான ஒட்சிசன் அங்கு இல்லை. அத்துடன் மனித உடலின் இயக்கத் திற்குப் பாதுகாப்பான புற அமுக்கம் அங்கு இல்லை. ஆகவே இவ்வாறான நிலமைகளை சீர்செய்யக் கூடியவாறு விண்வெளி வீரருடைய உடை அமைதல் வேண்டும். அவ் உடையானது கிட்டத்தட்ட 130 கிலோ எடை கொண்டது. 12 அடுக்குகளால் ஆனது கதிர் வீச்சுகளில் இருந்து காப்பாற்றுவதற்கு மட்டும் அடுக்கு கள் காணப்படுகின்றன. மேலும் அவருடைய உடலுக்குத் தேவை யான புற அமுக்கம் புற வெப்பநிலையை பேணக் கூடியவாறும் ஈர்ப்பு இல்லாத இடங்களில் நடக்கக் கூடியவாறும் அமைந்தி ருக்கும் இந்த ஆடையின் இலங்கைப் பெறுமதி கிட்டத்தட்ட 150 கோடி ரூபாய்கள்.

இத்தனை ஆபத்துக்களையும் சவால்களையும் தாண்டி புவியில் ஏற்படப் போகும் கனிய வளங்களின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து எதிர்கால சந்ததியினரின் வாடை வாழ்வாதாரம் அழிவுப் பாதையை நோக்கி பயணித்து விடாமல் தடுப்பதற் காகவே உயிரைப் பணயம் வைத்து விண் வெளிப் பயணங்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

**ஆக்கம்**
**க.கஜீபன்**
மொரட்டுவ பல்கலைக்கழகம்.



The doctor says, "At last I have found the medicine that can cure the chronic disease you have been suffering from for 15 years. Unfortunately, I am not able to read my own handwriting!"

பொற்கை குலசேகர பாண்டியனைப் பற்றி அநேகருக்குத் தெரிந்திருக்கும். நீதியின் பொருட்டு தன் உடைவாளால் தன்கையை வெட்டியெறிந்தவன். மன்னவனின் நீதியை எண்ணி அதிசயித்த மக்கள் அம்மன்னனுக்கு பொன்னால் செய்யப் பட்ட கையை அணிவித்தமையினால் "பொற்கைப்பாண்டியன்" என்ற சிறப்புப் பெயர் உண்டான வரலாறு பற்றி அறிந்தி ருப்பீர்கள். அம்மன்னனின் வரலாற்றுச் சிறப்பை கம்பரின் பாடலூடாகச் சுருக்க மாக நோக்குவோம்.

# இலக்கிய இன்பம்


எஸ்.நதிபரன் B.A. (Hons)

கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஒரு நாள் சிறிய வீட்டில் தங்கியிருந்தார். அவ் வீட்டு வாயிலின் முகப்பு தெற்கு நோக்கியவாறு இருந்தது. தெற்கு நோக்கிய வீடு சிறந்தது எனக் கொள்ளப்படுகின்றது.

அச்சிறிய வீட்டிற்கு ஒரு மூங்கிற் கதவு இருந்தது. கம்பர் அவ்வீட்டின் கண் இருந்து தமிழ்ப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார். அச்சமயம் காற்று வீசிக் கொண்டிருந்தது. இதனால், அடிக்கடி கதவு தட்டுப்பட்டுக் கொண்டிருந்தது.

கதவை யார் தட்டுகின்றவர் எனக் கூறியவாறு கம்பர் கதவைத் திறந்து பார்த்தார். ஒருவருமில்லை. தென்றலின் வேலைதான் என உணர்ந்தார். அதனால் அவருடைய கவி பாடும் கவனம் தடைப் பட்டது. உடனே ஒரு வெண்பாவைப் பாடினார். அப்பாடல் பொற்கைப் பாண்டிய மன்னனின் சிறப்பை உணர்த்துவதாக இருந்தது. கொற்கைப் பாண்டியனின் வரலாறு பற்றி அநேகருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்ற படியால் அம் மன்னனின் வரலாறு பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்.


கொற்கை என்ற ஊர் முன்னாளில் துறைமுகப் பட்டினமும், பாண்டி நாட்டின் தென் பகுதிக்கு தலைநகராகவும் இருந்தது. அந்நகரை குலசேகரன் என்ற பாண்டிய மன்னன் சிறப்பாக ஆட்சி புரிந்து வந்தான். குடிமக்களுக்கு துன்பம் நேராமற் காத்தற் பொருட்டு தன்னையே அர்ப்பணித்து செயலாற்றி வந்தான். இரவில் கூட மாறு வேடம் தரித்து குடிமக்களை கண்ணை இமை காப்பதுபோல் காவல் புரிவான். இரவில் திருடர்களாலும், வேறு பகைவர்களாலும் தீங்குகள் ஏதும் நிகழாமற் பொருட்டு இரவில் மாறுவேடத்தில் ஊர்மக்களைச் சுற்றிக் காவல் புரிவான்.



ஒருநாள் நள்ளிரவு வேளை காவல் புரிந்துகொண்டிருக்கையில் ஒரு அந்தணர் வீட்டில் அந்தணருக்கு அவர் மனைவிக்கு மிடையேயான உரையாடல் மன்னனின்

காதுகளிலும் தழுவியது. அந்தணர் மனைவியிடம் காசி யாத்திரை செல்வதற்கு விடை கேட்டான். ஆனால் மனைவியோ தனித்திருக்க அஞ்சுவதாகக் கூறினாள். அதற்கு, அந்தணர், கருணை மிக்க பாண்டியனின் ஆட்சியின் கீழ் நாம் வாழும் போது உனக்கேது பயம் என ஆறுதல் கூறினார். இதனைக் கேட்ட மாறு வேடத்திலிருந்த பாண்டிய மன்னன் மனம் நெகிழ்ந்தான்.

அடுத்த நாள் காலை அந்தணர் காசி யாத்திரை சென்றார். அந்தணர் தனது அருள் ஆட்சித் திறத்தை நம்பியே தனது இளம் மனைவியையும் தனித்திருக்க விட்டு யாத்திரை சென்றார். நாம் இனி அந்த வீட்டுக்கு அதிக பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என எண்ணி இரவில் ஊர்காவல் பணிபுரியும்போது குறித்த வீட்டில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தான்.



இவ்வாறு இரு வாரங்கள் கடந்தோடிவிட்டன. அதற்கடுத்த நாள் இரவு அவ்வீட்டில் ஒரு ஆண் குரல் கேட்டது. அரசன், இந்த நடு இரவில் ஆண்குரல் கேட்கக் காரணம் யாதென ஐயுற்றான். என்னை நம்பியல்லவா அந்த அந்தணர் தன் மனைவியை தனியே விட்டுச் சென்றார். வீட்டுக்குள் இருப்பவனை யாரென அறிய அம்மன்னன் துடித்தான். உடனே கதவைத் தட்டினான். உள்ளே இருந்த ஆண் தன்னை அறிமுகப்படுத்தியவாறு, யார் வந்திருப்பது? எனக் கேட்டார். அவரின் குரல் அந்த அந்தணரின் குரல் தான் என்பதை அறிந்தான் மன்னன். யாத்திரை சென்று மீண்டு விட்டார் என அறிந்த மன்னன் நடு இரவில் அவரின் வீட்டுக் கதவைத் தட்டியதால் அந்தணர் தன் மனைவியினுடைய கற்பொழுக்கத்தில் சந்தேகப்படலாம் எனக் கருதி, தீமையாய் முடியப் போகிறதே என ஐயுற்று அந்தணர் சந்தே கப்படாதிருக்கும் பொருட்டு அத் தெரு முழுவதுமுள்ள வீடுகளிலும் கதவுகளைத் தட்டி விட்டுச் சென்றான்.

மறுநாள், அவ்வூர் மக்கள் அரச சபைக்குச் சென்று இரவில் கள்ளன் எங்கள் வீட்டுக் கதவைத் தட்டிவிட்டு எம்மைப் பய முறுத்திச் சென்றதாக மன்னனிடம் முறையிட்டனர். மன்னனோ சிறிதும் சலனமுறாது, அம்மக்களைப் பார்த்து ஒரேநேரத்தில் இத்தனை வீடுகளின் கதவுகளைத் தட்டிய கள்ளனைக் கண்டுபிடித்தால் என்ன தண்டனை கொடுக்கலாம் எனக் கேட்டான். கள்ளனைக் கண்டு பிடித்து கதவுகளைத் தட்டிய கையை வெட்டவேண்டும் என்றனர். அதற்கு அரசன் அங்கு நடந்த விபரம் முழுவதையும் அம்மக்களுக்கு விளக்கிக் கூறியதுடன் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங் களுக்குக் காரணமாகிய தனது கையை தனது உடை வாளால் வெட்டியெறிந்தான். இதனைக் கண்ணுற்ற மக்கள் எல்லோரும் கண்ணீர் விட்டுக் கதறினார்கள், புலம்பினார்கள். பின்னர் பொன்னால் செய்யப் பட்ட கையைப் பொருத்தினார்கள். இதனால் அம்மன்னனுக்கு பொற்கைப் பாண்டியன் எனும் பெயர் உண்டாயிற்று.

இவனது வரலாற்றை வைத்தும் தென்றல் காற்றால் தனது வீட்டுக்கதவு தட்டப் பட்டதைக் குறித்தும் இரு சம்பவங்களையும் ஒப்பிட்டு கம்பர் பாடல் ஒன்றைப் பாடினார். சொற் சுவை, பொருட் செறிவு நிறைந்த அப்பாடல் இதோ,

“கொற்கையான் மாறன் குலசேகரப் பெருமான்
பொற்கையான் ஆனகதைபோதாதோ - நற்கமல
மன்றலே வாரிமணி வாசலைஅசைக்கத்
தென்றலே ஏன் வந்தாய் செப்பு?”

இதன் பொருள், தென்றலே உனக்கென்ன புத்தியில்லையோ? முன்பு சிறிதும் ஆராயமல் குலசேகர பாண்டியன் கதவுகளைத் தட்டி கைபோன கதை உனக்குத் தெரியாதா? என்ற கருத்தில் மேற்போந்த பாடல் குறிப்பிடத்தக்கது.

# இலங்கைத் திரையுலகின் ஒரு பார்வை.....

து.தமிழ்ச்செல்வன்
யாழ்.பல்கலைக்கழகம்

20 ஆம் நூற்றாண்டில் தனக்கென ஒருஇடத்தை தக்கவைத்தத் துறையாக தமிழ் சினிமா காணப்படுகின்றது. அதன் அன்றைய வளர்ச்சியில் மனித சமூகத்திக் உடலை மட்டுமல்லாமல் உள்ளத்தையும் ஊடுருவி ஆன்மாவோடு கலந்து நிற்கின்றது. அதிலும் தமிழர்களைப் பொறுத்தவரை குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து வரும் திரைப்படங்கள் தமிழ் சமூகத தில் ஏற்படுத்திய தாக்கம் அளப்பரியது.

தமிழகத்தில் ஏற்ப்பட்ட திரைப்படத் துறையின் வளர்ச்சியின் விளைவாக இலங்கையில் 1950 ஆம் ஆண்டு சினிமா என்ற தொடர்பூடகம் துளிர்விடத் தொடங்கிளது. 1950 தொடக்கம்1980 காலப்பபகுதி வரைக்கும் இலங்கையில் தமிழ் சினிமா தனக்கென ஒரு இடத்தைத் தக்க வைத்துக் கொண்டு பல்வேறு வகையறாக்களான திரைப்படங்கள் மண் வாசனையோடு தோன்றின. இதன் மூலம் பல இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், இசையமைப்பாளர்கள், பாடகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் தோன்றுதவற்கு அத்திவாரம் இடப்பட்டது. இவர்களின் முயற்சியின் விளைவாகப் பல தமிழ் திரைப்படங்கள் இலங்கையில் உருவாகின. அது மட்டுமல்லாது சிங்கள சினி மாவை இலங்கையில் வளர்த்து விட்டவர்களும் தமிழர்களே என்பது மறக்கப்பட்ட ஒரு விடயம்.





1950 ஆம் ஆண்டுகளில் இலங்கைத் தமிழ் சினிமாவின் காலம் தொடங்கிவிட்டாலும் உறுதியாக 1952 ஆம் ஆண்டளவில் சினிமாவில் ஆர்வமுள்ள இலங்கை கலைஞர்க ளான எம்.பி ராமன், ஏ.அருணன், பி. தங்கவேலு, ஹென்றி சந்திரவன்ஸ் போன்றோர்கள் மலையகத்தில் ஒன்று சேர்ந்து சினிமா கலா நிலையம் ஒன்றை அமைத்தார்கள். அதன் பின்னரே இலங்கையில் சினிமாவின் வளர்ச்சி அரும்பத் தொடங் கியது. அது அந்தக் காலகட்டத்தில் பல வகைகளில் உருவாக்கப்பட்டன.

1. குறும்படம்
2. முழுநீளத் திரைப்படம்



3. மொழிபெயர்ப்புத் திரைப்படம் (சிங்கள- தமிழ்)
4. இலங்கை- இந்திய கூட்டுத் திரைப்படம்




இதனடிப்டையில் இலங்கையின் முதலாவது குறும்படம் முதல் தமிழ் படம் என்ற இடத்தைத் தக்க வைத்து'க கொண்ட படமாக சமுதயாம் என்ற படம் காணப்படுகின்றது (1956). இந்தத் திரைப்படத்தை ஹென்றி சந்திர வன்ஸ என்ற சிங்களவரே தயாரித்தார். அதே போல் இலங்கையின் முதலாவது சிங்களத் திரைப் படமான கவுடுனு பொறந்துரவ என்ற படத்தை எஸ்.என்.நாயகம் என்ற தமிழரே தயாரித்தார்


அதன் பின்னர் பாசநிலா என்ற குறும்படம் யாழ்ப்பாணத்தை மையமாக வைத்து உருவானது. இந்தத் திரைப்படமானது 1965 ஆம் ஆண்டு யாழப்பாண மத்திய கல்லூரி ஆசியரான ஜோசப் தேவானந் தன் தயாரித்தார்.

இவ்வாறு சில குறும்படங்கள் ஆரம்பத்தில் தோன்றிளாலும் பின்னர் முழு நீளத் திரைப்படத்தின் வருகை ஆரம்பிக்கத் தொடங்கியது. அந்த அடிப்படையில், தோட்டக்காரி, நிர்மலா, பொன்மனி, வாடைக்காற்று, குத்து விளக்கு, கடமை எல்லை பொன்ற சில திரைப்படங்கள் வெளிவந்தன. இதில் தோட்டக்காரி 1960 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட திரைப்படமாகும். அதனைத் தொடர்ந்து சில முழுநீளத் திரைப்படங்கள் தோன்றினாலும், அவை பொரிதாகச் சோபிக்கவில்லை என்றே கூறலாம்.

அதன் பின்னர் இலங்கைத் தமிழ் திரைப்படத்துறையின் திருப்பு முனையாக கட்டடக் கலைஞரான எஸ்.பி.துரைராஜா அவர்களினால் குத்துவிளக்கு திரைப்படம் எடுக்கப்பட்டது. இது யாழ்ப்பாண மண் வாசனையை பிரதிபலிப்பதாகக் காணப் படுகின்றது. இது இன்று வரை ஈழத் தமிழர் மனங்களில் நினைவு கொள் ளப்படுகின்றது.


குறும்படம், முழுநீளப்படம் இரண்டையும் தன்னகத்தே கொண்டு விரிவு பெறத் தொடங்கிய இலங்கை சினிமா அதனோடு நில்லாமல் மொழி பெயரப்பு படங்களிலும், கூட்டு முயற்சிலும் படங்களைத் தயாரிக்கத் தொடங்கின. அந்த வகையில் மொழிபெயர்ப்புப் படங்களாக, கலியுக காலம், நான்கு லட்சம், யார் அவள், சுமதி எங்கே, பனி மலர்கள், ஒரு தலைக் காதல் போன்ற திரைப் படங்கள் அடங்களாக எட்டுத் திரைப் படங்கள் மொழி பெயர்க்கப்பட்டன. மேலும் இலங்கை இந்திய கூட்டு முயற்சியினால் பைலற் பிரேம்நாத், நங்கூரம், தீ, மோகனப் புன்னகை, வசந்தத்தில் ஓர் வானவில் போன்ற திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன.

பல்வேறான அம்சங்களோடு பயணித்த இலங்கைத் தமிழ் சினிமா 1980 காலப்பகுதி வரைக்கும் கொடி கட்டடிப் பறந்தலும் அந்தப் பிம்பம் சரியத் தொடங்கியது. காரணம், 1983 இனக்கலவரத்தின் காரணமாகப் பல கலைஞர்கள் உயிரிப்பலியானதும், அத்தோடு கலைஞர்கள் பலர் வெளி நாடுகளுக்கு பயணமானதும் ஆகும். இதனால் திரைப்படத்துறை சரிவை நோக்கியது.



# வைண பக்தி இலக்கிய வரலாற்றில் பெரியாழ்வார் பெருமை

ஆக்கம்
புலோலியூர் வேல் நந்தகுமார் *BA Hons*
ஆசிரியர்



வைணவ பக்தி இலக்கிய வரலாற்றிலே பகவானின் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுபவர்களை ஆழ்வார்கள் என்று கூறுவார்கள். எவ்வாறு சைவ பக்தி இலக்கியத்தை நாயன்மார்கள் வளர்த்தார்களோ அவ்வாறே வைணப் பக்தி இலக்கிய வளர்ச்சிக்கு பங்காற்றியவர்களாக அவ் ஆழ்வார்கள் விளங்குகின்றனர். இவ் ஆழ்வார்களைப் பற்றி "ஆசைப்பட்டு ஆழ்வார் பலர் என்று திருமழிசை யாழ்வாரே நான்முகன் திருவந்தாதியில் சொல்லியிருக்கிறார். ஆழ்வார் என்கின்ற சொல்லை ஜைன பௌத்த ஞானிகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர்.

உ-ம்: ஆக மயித்திரியாழ்வார் என்று புத்த தேவர்க்குப் பெயருள்ளதைத் தக்கயாக்கப் பரணி என்னும் நூல் சொல்கிறது. அவிரோதியாழ்வார் என்று ஒரு ஜைன முனிவர்க்குப் பெயர் இருந்திருக்கிறது. ஆழ்வார் என்ற பட்டம் நேரடியாகப் கடவுள் என்ற பொருளிலும் ஆழ்வார் திருவரங்கத்தேவர் என்று சாசனங்களில் வருகிறது.


இவ் வகையில்தான் வல்லிபுர ஆழ்வார் என்ற கோயிற் பெயரும் அமைகின்றது. இவ் ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களின் தொகுப்பாகவே நாத முனிகளால் தொகுக்கப்பட்ட நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் அமைகிறது. வெவ்வேறு காலப் பகுதிகளையும் சாதிகளையும் சேர்ந்த ஆழ்வார்கள் பற்றி இது பேசுகிறது.

முதலில் ஆழ்வார்கள் பத்துப்பேர் என்று சொல்லப்பட்டது. இப்போது பன்னிரு ஆழ்வார்கள் பற்றிப் பேசப்படுகிறது. அவர்கள் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம். பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருமங்கையாழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருபாணாழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், (நம்மாழ்வாரை பாடியவர்) திருப்பாவையிலும் நாச்சியார் திருமொழியும் பாடிய ஆண்டாள் போன்றோரே அவர்களாவர். பெண்களையும் ஆழ்வார் என்று குறிப்பிடும். வழக்கம் பழந் தமிழ்நாட்டில் இருந்திருக்கிறது. மதுராந்தகியாழ்வார் அம்மங்கையாழ்வார் போன்று சோழ சாசனங்களிலிருந்து இந்தச் சொல் இருபாலருக்கும் பயன்பட்டது

என்பது தெரிகிறது. ஆண்டாள் எனும் பெயரில் ஆள் என்பதே ஆழ்வாரின் பகுதியோவென எண்ண வைக்கிறது. ஆச்சாரியார் என்போர் ஆழ்வார்களுக்குப் பிற்பட்டவர்கள் பிரபந்தத்தை தொகுத்த நாதமுனிகள் இவர்களுள் முதலானவர், ஆழ்வார்கள் சொன்ன வழியைப் பின் பற்றி வைணவக் கருத்துக்களை நாட்டில் பரப்பி நல்வாழ்வுக்கு வழிகாட்டுபவர் களே ஆசாரியர்கள் எனப்பட்டனர். ராமா னுஜர் இவ்வகையினரே. பின் சைவத் திலும் இவ் ஆசாரிய மரபு பின்பற்றப்பட் டுள்ளது. வேறுபட்ட முறையில்,

ஒவ்வொரு ஆழ்வார்களும் பகவான் விஸ்ணுவை பல்வேறு பட்ட உலகியல் சார் உறவு நிலைகளில் வைத்து வழிபட்டு தமது பக்தியை வெளிப்படுத்தி யுள்ளதைக் காண முடி கிறது. இவ் வகையில் தன்னை தாயாக்கி விஸ்ணுவைக் குழந்தை யாக்கி பிள்ளைத் தமிழ் சார் பாவனை பக்திக் கூடாக பகவான் மீதே திருப்பல்லாண்டு பாடிப் பெருமை பெற்ற பெரி யாழ்வாருடைய வர லாறு சிறப்புக்குரியது. அது பற்றி இனிவிரிவாக நோக்குவது பொருத்த முடையதாகும். தென் பாண்டி நாட்டிலுள்ள ஸ்ரீ வல்லு புத்தாரில் ஆனி மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில் முன் குடுமிச் சோழிய பிராமண மரபில் வந்தவேயர் குலம் என அழைக்கப்பட்ட வம்சத்தில் முகுந்தப்பட்டர் என்பவருக்கும் பது மவல்லி நாச் சியாருக்கும் புத்திரராக அவதரித்தவரே விஸ்ணு சித்த என்ற இயற் பெயரையுடைய பெரியாழவார் ஆவார். இவரைக் கருடனின் அம்சம் என்று சொல்கிறார்கள். வடபத்திரசாயி என்ற பெயரில் பள்ளி கொண்ட கோலத்தில் இருக்கும் வடபெருங் கோயிலுடையன் என்று வழங்கப்படும் கோயிலிற்குத் தெற்கே நந்தவனம் அமைத்து தினமும் பகவானுக்குப் பூக்கட்டி மாலை சார்த்தி வந்தார்.

விஸ்ணு சித்தர் பெரியாழ்வார் ஆன கதை சுவார்சியமானது. ஸ்ரீ வல்லபவன் என்கிற பாண்டிய மன்னன் ஒருமுறை இரவில் நகர் வலம் வரும்போது ஒரு வழிப்போக்கனை எழுப்பி விசாரித்தாராம். அவன் வடதேச யாத்திரை முடித்து வீடு திரும்பியதாகச் சொன்னான். யாத்திரையால் என்ன பயன் கண்டாய் என்ற மன்னன் கேட்க பரம் பொருளை அறிந்தேன் என்றான். “மன்னனே மழை காலத்துக்கு வேண்டி யதைக் கோடை யிலும், முதுமை காலத்திற்கு வேண்டியதை இளமையிலும் மறுமைக்கு வேண்டியதை



இம்மையிலும் தேடுக என்கிற பொருள்பட ஒரு சமஸ்கித சுலோகத்தையும் சொன்னான். இது மன்னனை சிந்தனையில் ஆழ்த்தியது. “எனக்கு இப் பிறப்பில் எல்லா சந்தோசங் களும் கிடைத்திருக்கின்றன. அடுத்த ஜென் மத்திற்கு என்ன செய்ய வேண்டும்?” என்று தனது புரோகிதரான செல்வ நம்பியைக் கேட்க, அவர் “வித்துவான்களைத் திரட்டி கடவுள் தத்துவத்தைப் பற்றி ஒரு விவாதம் நடத்துங்கள். பரம்பொருள் யாது என்று நிருபணம் செய்ய ஒரு போட்டி ஏற்பாடு செய்யுங்கள்” என்ற சொல்ல மன்னன் அதற்குப் பரிசாக ஒரு பொற்கிழியைக் காட்டி வித்து வான்களை அழைத்து சபை கூட்டினான்.

இவ்வேளையில் பெரியாழ்வாரின் கனவில் மகாவிஷ்ணு தோன்றி "நீர் போய் அந்தக் கிழியை அறுத்து வாரும்" என்று ஆணையிட்டார். பெரியாழ்வாரோ "எனக்கு அதற்குத் தகுதி இல்லையே" என்று சொல்ல "உம் மூலம் நானல்லவோ தத்துவங்களை விளக்கப்போகிறேன் தைரியமாகச் செல்லும்" என்று கூறினார். இதன்படி விஸ்ணு சித்தர் அப்போட்டியில் பங்குகொள்ள வந்தவேளை அங்கிருந்த பெரிய பெரிய வித்துவான்களெல்லாம் இவர் படிக்காதவர் இவர் எப்படி பரதத்துவத்தைச் சொல்லப் போகிறார் என ஏளனம் செய்தனர். அப்போது விஸ்ணு சித்தருக்கு திருமாலின் கடாட்சத்தால் ஞானம் ஏற்பட்டுத் தெளிவாக ஸ்ரீமத் நாராயணனே எல்லோருக்கும் தலைமையான கடவுள் என்று நிரூபிக்க பொற்கிழி தானாக இவர் முன்னால் தாழ இதைக் கண்ட அரசனும் வித்து வான்களும் ஆழ்வாரை வணங்கி அவரை யானை மீது ஏற்றி அவருக்குப் பட்டம் பிரான் என்று பட்டம் சூட்டி நகர்வலம் வந்தபோது அதைக் கண்டு களிக்கத் திரு மாலே கருடன் மேல் ஏறிப்பிராட்டியுடன் வந்து தரிசனம் தந்தவேளை ஆழ்வார் யானையின் கழுத்தில் உள்ள மணிகளைத் தாளமாக்கிக் கொண்டு பக்திப் பரவசத்தில் திருப்பல்லாண்டைப் பாடினார் என்பது குரு பரம்பரைக் கதையாகும். திருமால் மீதே திருப்பல்லாண்டு பாடிய பெருமை கருதியே அன்று முதல் இவர் பெரியாழ்வார் என்று அழைக்கப்படலானார்.

இதைப்பற்றி மணவாளமுனிவன் "உபதேசரத்தின மாலை" என்னும் நூலில் குறிப்பிடும்போது,

"மங்கள சாஸணத்தின் மற்றுளள் ஆழ்வார்கள்
தங்கள் ஆர்வத்தளவு தோன்றிப் - பெங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர் பட்டர் பிரான் பெற்றான்
பெரியாழ்வார் என்னும் பெயர்"

- என வெண்பாவில் பாடியுள்ளார்.

பெரியாழ்வார் இவ்வாறு பாடிய பெரியாழ்வார் திருமொழி என்பது திருப்பல்லாண்டு எனும் பன்னிரண்டு பாசுரங்களையும் 461 பாடல்களையும் கொண்ட ஒரு வைணவ பக்தி இலக்கியமாகும். இதில் அவர் பிள்ளைத் தமிழ் ஊற்றுக்களையும், பாவனை பக்தியையும், தன்னைத் தாயாக்கி கண்ணனைக் குழந்தையாக்கி தாய்மை உணர்வு தோன்ற சிறப்புற வெளிப்படுத்தியுள்ளார் பெரியாழ்வார் திருமொழியானது முதலில் விஸ்வினுடைய பெருமைகளைக் கூறி பல்லாண்டு பாடுவதாகவும் அந்த இறை அனுபவத்திற்கு எம்மை அமைப்பதாகவும் அமைகிறது. வரிசைக் கிரமத்தில் பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு தான் முதலில் வருவதாக அமைகிறது. எல்லோரையும் நீண்ட காலம் இருங்கள் என வாழ்த்தும் இந்தப் பரசுரங்கள் பொருத்தமாக பிரபந்தத்தின் வாசலாக அமைகிறது. எல்லோரையும் நீண்ட காலம் இருங்கள் என வாழ்த்தும் இந்தப் பாசுரங்கள் பொருத்தமாக பிரபந்தத்தின் வாசலாக அமைகின்றது. அவரது முதலாம் பாடல் இவ்வாறு அமைகின்றது.

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
சேவடி செவ்வி திருக்காப்பு

காப்புச் செய்யுளாய் அமையும் இப்பாடலில் பகவானின் திருவடிகளையே பெரியாழ்வார் காப்பாகக் கொள்கிறார். இங்கு பகவானையே பலநூறு, ஆயிரம் கோடி, பல கோடி ஆண்டுகள் வாழுமாறு கூறுகிறார். பகவானை வாழ்த்த பக்தனுக்கு என்ன தகுதி என வியப்பாக இருக்கலாம். பெரிய வாச்சான் பிள்ளை இதற்கு விளக்கம் தருகிறார். அழகும் மென்மையிலும், கல்யாண குணங்களும் கொண்ட பெருமான் காலத்தால் கட்டுப்பட்ட இவ்வுலகிற்கு வந்துவிட்டதை கண்ட பெரியாழ்வார் இதனால் இவருக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சி காலமானது தொடக்கமும் முடிவும் இல்லாதது என்கிறபடி காலம் என்னும் தத்துவம் உள்ளவரை எம் பெருமானின் அழகு முதலியவை மாறாமல் நிலைத்திருக்க வேண்டும் என்று பல்லாண்டு வாழ்த்திப் பாடுகிறார் என்கிறார்.

சுழலும்.....

# ஏகாதசி விரதத்தின் மகிமை

மகா விஷ்ணு மூர்த்தியின் விரதங்களில் சிறப்பு வாய்ந்தது ஏகாதசி விரதம். ஒவ்வொரு மாதத்திலும் பூர்வபக்க ஏகாதசி என்றும் அபர பக்க ஏகாதசி



என்றும் ஒரு வருடத்தில் மொத்தம் 24 ஏகாதசிகள் வரும். இவற்றில் மார்கழி மாதத்தில் வரும் பூர்வபக்க ஏகாதசியை சுவர்க்க வாயில் அல்லது வைகுண்ட ஏகாதசி என்று சொல்லப்படும். மாசி மாதத்தில் வரும் பூர்வ பக்க ஏகாதசியை "வீம ஏகாதசி" என்று சொல்லப்படும். ஒரு வருடத்தில் வரும் 24 ஏகாதசிகளில் இவை இரண்டும் மிகவும் சிறப்பு வாய்ந்தவை.

ஏகாதசித் திதி உருத்திரனது நல்ல திதியாகும். துவாதசித் திதி மகா விஷ்ணுவின் திதியாகும். திருப்பாற் கடலைக் கடடைந்தபொழுது அதில் தோன்றிய விஷத்தைச் சிவபெருமான் இந்த ஏகாதசித் திதியில் தான் உட்கொண்டார். துவாதசித் திதியில் தான் மகாலட்சுமி அம்மன் திருப்பாற் கடலில் தோன்றினார். இந்த இரண்டு திதிகளும் ஒன்றாய்க் கலக்கும் போது ஏகாதசி விரதம் அனுட்டிப்பதற்கு மிகவும் சிறப்பாக அமையும்.

வைணவர்கள் எனப்படுபவர்கள் இருவகைப்படுவர். பஞ்சராத்திரம் என்னும் நூலின் மார்க்கப்படி ஒழுகுபவர்களை மகா வைணவர்கள் என்றும் வைகாசனம் என்னும் நூலின் மார்க்கப்படி ஒழுகுபவர்களை வைணவர்கள் என்றும் வேதங்கள், சுருதிகளின் மார்க்கத்தில் ஒழுகுபவர்களை வைதியர்கள் அல்லது ஸ்மாத்தர்கள் என்றும் சொல்லப்படும். சோமுகாசுரன் என்பவன் வேதங்களைக் கவர்ந்து சென்ற பொழுது அவைகளை மீளவும் ஐந்து இரவுகளில் மகா விஷ்ணுவால் அருளிச் செய்த காரணத்தால் பஞ்சராத்திரம் என்னும் பெயர் வழங்கப்பட் டது.

தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் ஒன்றுடன் ஒன்று கலக்கப் பெறுகின்ற நேரத்தைக் "கால நிர்ணயம்" என அழைக்கப்படுகிறது. மகா வைணவர்கள், வைணவர்கள், வைதியர்கள் அல்லது ஸ்மாத்தர்கள் என்ற பாகுபாட்டை உடையவர்களும் இவர்களில் பிரமச்சாரிகள், கிருகத்தர்கள், வானபிரத்தர்கள், சந்நியாசிகள், சுமங்கலிகள், அமங் கலிகள் என்ற பாகுபாட்டை உடையவர்க ளும் இந்தக் கால நிர்ணயத்திற்கேற்ப இந்த ஏகாதசி விரதத்தை அனுட்டித்தால் கூடிய பலனை அடையலாம் என ஏகாதசிப் புராணம் பகர்கிறது.

அரியாகிய கோவிந்தக் கடவுள் ஆடி மாதத்தில் அறிதுயில் புரியத் தொடங்கி கார்த்திகை மாதத்தல் துயில் நீத்து எழும்புவார். ஆகையால் இந்த 5 மாதங்களிலும் வரும் அபர பக்க, பூர்வ பக்க ஏகாதசி விரதத்தை சுமங்கலியும், நல்ல கிருகத்தர்களும், பிரமசாரியும் ஆகிய இவர்கள் அனுட்டிக் கலாமென்று முனிவர்கள் கூறினார்கள்.

முன்னொரு காலத்தில் அயோத்தி நகரத்தை அரசாட்சி செய்த உருக்கு மாங்கத அரசன் என்பவன் ஏகாதசி விரதத்தை அனுட்டித்து வருகின்ற நாளில் அவனது உண்மைத் தன்மையைப் பரிசோதிக்கும் பொருட்டு மகா விஷ்ணு உரும்பசி என்ற தேவ ரம்பையை

அழைத்து "பூவுலகத்துக்குச் சென்று உருக்குமாங்கத அரசனை மயக்கி அவனுடன் சேர்வையாக" எனப் பணிக்க அவளும் அவ்வாறே சென்று உருக்கு மாங்கத அரசனை மயக்கினாள். அரசனும் தனது அரசாளும் பொறுப்பைத் தனது ஒரே மகனான தன்மாங்கதனிடம் ஒப்படைத்து விட்டு உருப்பசியோடு சிற்றின்ப சாக ரத்தில் அமிழ்ந்தினான். அவளும் தனது சொற்படியே அரசன் ஒழுக வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே அரசனைச் சேர்ந்தாள். ஒரு நாள் காலையில் இன்று "ஏகாதசி விரதம்" எனத் தன்மாங்கதன் பறையறிவித்தான். அப்பொழுது உருப் பசி வெற்றிலை பாக்கை உருக்குமாங்கத அரசனிடம் கொடுக்க அவன் இன்று ஏகாதசி விரதம் என அதை ஏற்க மறுத்து விட்டான். அப்பொழுது அவள் உருக்கு மாங்கத அரசனைப் பார்த்து நீ உண்மையான விசுவாசத்தோடு ஏகாதசி விரதத்தை அனுட்டிப்பதாகவிருந்தால் உனது மகன் தன்மாங்கதனை வாளால் வெட்டு பார்க்கலாம் எனக் கூறினாள். அதற்கு அரசன் உடன்பட்டு வாளை ஓங்கி வெட்டிய பொழுது அது மாலையாக அவன் கழுத்தில் விழுந்தது. அப்பொழுது சிவபெருமான் இடப வாகனத்திலும், பிரமதேவர் அன்னப் பட்சியிலும், மகா விஷ்ணு கருட வாகனத்திலும் ஆகாயத்தில் காட்சி கொடுத்து உருக்கு மாங்கதனின் விரதத்தின் மகிமையை உலகறியச் செய்தார்கள்.

எவராயினும் இந்த ஏகாதசி விரதத்தை அனுட்டிப்பவர்கள் பாரணத்தி லன்று எண்ணெய்யை சிரசில் தேய்த்து நீராடக் கூடாது. முன்னொரு காலத்தில் புரூரவா சக்கரவர்த்தி என்பவன் அப்படிச் செய்து புலி முகத்தைப் பெற்று அனேக காலம் வனாந்தரங்களில் திரிந்து அவன் பூர்வ ஜென்மங்களில் செய்த நல்ல புண்ணியத்தின் பயனாய் ஈற்றில் மகா விஷ்ணுவின் அனுக்கிரகத்தால் மீளவும் மன்மதன் போன்ற உருவத்தைப் பெற்றான்.

இந்த விரதத்தை அனுட்டிப்பதற்கு நாராயணக் கடவுள் அவதரித்த திருவோண நட்சத்திரத்தோடு மகாலட்சுமி அம்மன் திருபாற் கடலில் அவதரித்த துவாதசித் திதியும் சேர்ந்துவரின் அது மிகவும் விசேடமானது.

திருமாலின் "நாராயணா நம" என்ற அட்டாட்சரத்தை உச்சரித்து ஏகாதசி விரதத்தை அனுட்டிப்பவர்கள் 8 வயது தொடக்கம் 80 வயது வரை அனுட்டிக்கலாம். வயோதிபத்தில் இயலாமை காரணமாக இவர்கள் சார்பில் இன்னொருவரும் இவ்விரதத்தை அனுட்டிக்கலாம்.

**ச.பரஞ்சோதி** (J.P)
**பருத்தித்துறை மத்தியஸ்த சபை அங்கத்தவர்.**



# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தின் சேவைகளும் பணிகளும்

⌘ பிரதி ஞாயிறு தோறும் அன்னதானம் வழங்குதல்.

⌘ மஹோற்சவ காலங்களில் அன்னதானம் வழங்குதல்.

⌘ ஞாயிற்றுக்கிழமைகளில் ஆன்மீக நிகழ்வுகள் நடாத்தல்.

⌘ முதியோர் இல்லம் அமைத்து வருதல்.

⌘ சமய கலாசார நிகழ்வுகளுக்காக மண்டப வசதிகள் செய்து கொடுத்தல்.

⌘ திருமண சுபமுகூர்த்தங்களிற்கு மண்டபமும் உணவு, உபசார நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்தல்.

⌘ மாணவர்கள், முதியோர்களுக்கான பொருள் உதவி வழங்கல் போன்றவை குறிப்பிடத் தக்கவை.

நேர்த்திக் கடன் அன்னதானப் பணிகள் செய்ய விரும்புவர்கள், அன்னதானப் பணிக் காக உதவி செய்ய விரும்புவர்களும் எம் ஆச்சிரமத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

***உங்கள் தொடர்புக்கு :***

*ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்*
*பெரியாழ்வார் ஆச்சிரமம்*
*வை.ஆனந்தராசா*
*021 321 4769,*
*077 8933528*

# Net work of computer

## கணினிகளுக்கிடையிலான வலையமைப்பு

ஜெ.கீர்த்தனா.
ருவான்புர தேசிய கல்வியற்கல்லூரி(ICT)

கணினிகளுக்கிடையிலான வலையமைப்பு என்பது ஒரு கணினியை ஏனைய கணினிகளோடு பயன் பெறும் நோக்கத்துடன் வலைப்பின்னலூடாக இணைணத்துக் கொள்ளும் செயறபாடு கணினிவலையமைப்பு ஆகும். இது மூன்று வகைப்படும்.

LAN-Local Area Net Work
WAN-Wide Area Net Work
MAN-Metropolitan Area Net Work

**LAN:**
இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கணினிகளை இணைப்பதன் மூலம் வரையறுக் கப்பட்ட எல்லைக்குள் அதாவது குறிப்பிட்ட அறை அல்லது அலுவல கங்களில் மேற்கொள்ளப்படும்.

உதாரணம்- பாடசாலைகணினி ஆய்வுகூட வலையமைப்பு.

**WAN:**
நகரங்கள் அல்லது நாடுகளுக்கிடையிலான வலையமைப்பு இதுவாகும் இதற்கு எல்லை வரையறை செய்யப்படமாட்டாது இது பல LAN,WAN களைக் கொண்டிருக்கும்.

**MAN:**
இது நிறுவனங்களுக்கிடையில் அல்லது தலைமை நிறுவனத்திற்கும் அதன் கிளை நிறுவனத்திற்கும் இடையிலான வலையமைப்பாகும் இது பல LAN களைக் கொண்டிருக்கும். உ+ம்: பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வலையமைப்பு.

கணினி வலையமைப்பின் ஊடாக நாம் பல நன்மை தீமைகளை பெற்றுக்கொள்வது சாதாரணமானதே. அந்த வகையில் வலையமைப்பின் ஊடாக நாம் பெற்றுக்கொள்ளும் நன்மைகளை எடுத்துநோக்குமிடத்து:-

❖ தகவல்களையும் தரவுகளையும் மிக விரைவாக கணினிகளுக் கிடை யில் பரிமாறலாம்.
❖ ஒரே நேரத்தில் பலர் ஒன்றாக இணைந்து வேலை செய்யக் கூடிய வசதிகள் உண்டு.
❖ ஒரு கணினியிலுள்ள மென் பொருட்கள் தகவல்களை மற் றைய கணினிகளில் பயன்படுத் தக்கூடிய வசதிகள்.
❖ Printer,Fax,Scaner போன்ற வற்றை ஏனைய கணினிகளோடு பரிமாறக் கூடியவசதி என்பன நன்மைகளாக உள்ளன. வலையமைப்பின் தீமைகளாக உள்ளவற்றை எடுத்து நோக்குவோமாயின்
❖ செலவு அதிகம்.
❖ கணினிகளைப்பாதுகாப்பது கடினம்.
❖ வலையமைப்பில் ஏற்படும் பாதிப்பானது குறித்தநிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளையும் பாதிப்படையச் செய்யும்.

நாம் வலைப்பின்னல்களை ஏற்படுத்துவதற்கு பின்வரும் கருவிகள் தேவையானவையாகும்.

1.Sever,Personal computer
2.Communication media
i. twistedpairwire
ii. Coaxical cable
iii. Fiber optical
3.Modem NetworkCard
4.Hub/Switch
5.Net work Soft ware

போன்றன முக்கியமானவையாகும்.
இவ்வலையமைப்பானது

I. Star topology
II. Ring topology
III. Bus topology

என்ற வகையில் அமைக்கமுடியும்.

# ஆழ்வார் பாடல்கள் புலப்படுத்தும் அவதாரம் பற்றிய சிந்தனைகள்

அவதாரம் என்பது இறைவன் மக்களை நல்வழிப்படுத்தவும் தருமத்தை நிலைநாட்டவும் விண்ணிலிருந்து மண்ணிற்கு இறங்கி வருதல் என டாக்டர் சிவ.திருச்சிற்றம்பலம் விளக்கமளிக்கிறார். "சாது சனத்தை நிலியங் கஞ்சனைச் சாதிப்பதற்கு ஆதியுருஞ் சோதியுருவை அங்கு வைத்து இங்குப் பிறந்த" என்ற நம்மாழ்வாரின் திருவாக்கின்படி அடியவர்களைக் காக்கும்பொருட்டு திருமால் பல அவதாரங்களை எடுத்துள்ளார் என்பது புலனாகிறது. வைணவ சமயத்தில் மட்டுமே அவதார தத்துவ சிந்தனைக்கோட்பாடு காணப்படுவது நாம் அறிந்ததொன்றே. அதாவது எம்பெருமான் தன் சொந்தங்களாகக் கருதும் தேவர், மக்கள், தாவரம், விலங்கு, பறவை போன்ற இனங்களின் நடுவே அவற்றைப் போலவே அவதரித்து அவையே இவன் எனும்படி நிற்பதால் அதனை அவதாரம் எனக் கூறுவதாக மு.பாலமுருகன் கூறுகிறார். திருமால் எடுத்த அவதாரங்கள் முப்பது முதல் நாற்பதுக்குள் இருக்கலாம் என ஸ்ரீ வேதாந்த தேசிகர் குறிப்பிடுகிறார். இவ்வாறு வைணவத்தில் காணப்படும் அவதார நம்பிக்கை மற்றும் தத்துவ சிந்தனைகளின்படி திருமால் பல அவதாரங்கள் எடுப்பினும் பத்து அவதாரங்கள் சிறப்புடையனவாகக் கருதப்படுகின்றன. மேலே கூறப்பட்டவாறாக பத்து அவதாரங்களை தச அவதாரங்கள் என்று வழங்கப்படுகின்றன. இவை பற்றி திருமங்கையாழ்வார்:

"மீனோடும் ஆமை கேழல் அரி
குறளாய் முன்னும் இராமனாய்த்
தாயாய்ப் பின்னும் இராமனாய்த்
தாமோதரனாய்க் கல்கியும் ஆனான்"

என்று வரிசைப்படுத்திப்பாடுகிறார். மனிதன் எடுக்கின்ற பிறவி யாவும் அவன் நல்வினை தீவினைக்கேற்ப அமைவதாகவும் ஆனால் அவதாரம் இறைவனின் திருவுள்ளப்படியே நிகழ்வதாகவும், இவற்றை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் எனவும் என்.கோபாலதேசிகாச்சாரியார் குறிப்பிடுகின்றார்.

அடுத்து இவ்வாறு காணப்படும் அவதாரம் பற்றிய சிந்தனைகளை ஆழ்வார் பாடல்களில் நோக்குவோம். "தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும், தருமம் மறுபடி வெல்லும்" என்று பாரதி குறிப்பிடுகின்றார். தருமம் மறுபடியும் வெல்ல வேண்டுமென்றால் அங்கு அவதாரம் நிகழ்ந்து துணை நிற்க வேண்டும். அப்படி நின்ற அவதாரங்கள் பற்றிய தத்துவ சிந்தனைகளை ஆழ்வார் பாடல்களில் கண்டுகொள்ள முடிகின்றது. அந்தவகையில் முதலில் மச்சாவதாரம் காணப்படுகின்றது. இவ் அவதாரம் பற்றிய செய்திகளை ஆழ்வார் பாடல்களில் காண முடிகிறது. அதாவது ஒரு கற்பத்தின் முடிவில் உலகமெல்லாம் கடலில் மூழ்கியது. இமையோர்கள் புகலிடமின்றித் திருமாலைச் சரணடைந்தனர். திருமால் மச்சாவதாரத்தினை மேற்கொண்டு கடலுள் புகுந்து மறைந்திருந்த சோமுகாசுரனைக் கொன்று வேதங்களை மீட்டு, பிரமனுக்கு அவற்றை அருளினார் என்ற செய்தியை இவர்தம்பாடல்களில் காணமுடிகின்றது.

தொடர்ந்து கூர்மாவதாரம் பற்றிய செய்திகளைப் பார்ப்போமாயின், திருமாழிசையாழ்வார் பாடலில்

சி.நிருசன்.
யாழ் பல்கலைக்கழகம்.

"வெள்ளை வேலை வெற்பு நாட்டி
வெள்ளெயிற்ற நாவளாய்
அள்ளலாக் கடைந்த அன்று
அருவரைக்கோர் ஆமையாய்...."

அதாவது மந்திர மலையை மத்தாக வும், வாசுகி பாம்பைக் கயிறாகவும் கொண்டு தேவர்கள் பாற் கடலைக் கடைந்த பொழுது திருமால், தேவர் கள் வேண்ட, கரியநிற ஆமை வடி வேற்று அமுதம் தோன்றும்வரை அம் மலையைத் தாங்கி நின்றார். என்ற அவதாரம் பற்றிய செய்தியை அறிய முடிகிறது.

இவ்வாறாக வராகவதாரம் பற் றிய செய்திகளாக, இரணியாட்சன் என்னும் அசுரன் பூமியைக் கவர்ந்து கடலுள் மூழ்கிச் சென்றான். அவ்வ மயம் திருமால் வராக அவதாரத்தை மேற்கொண்டு தன் கொம்பினால் இரணியாட்சனைக் கொன்று நீரினுள் அமிழ்ந்த நிலத்தை மீட்டருளினார். இது இவ்வாறிருக்க சிவபுராணங்களில் சிவனுடைய திருவடியைக்காண திரு மால் வராக அவதாரம் மேற்கொண்ட தாகவும் ஆழ்வார் பாடல்கள் இயம்பு கின்றன. இது பற்றி பெரியாழ்வார் பாடலை நோக்குமிடத்து,

"வள்ளெயிற்றுக் கேழலுமாய்
வாளெயிற்றுச் சீயமுமாய்..."

மேலும் நரசிம்மாவதாரமானது பெரும் வரங்களைப்பெற்ற இரணியன், செருக்கு மிகக்கொண்டு தேவர்களுக் கும், ஸ்ரீமந் நாராயணனைக், கடவு ளாக வணங்கிய பக்தன் பிரகலாத னுக்கும், பல துன்பங்களைத் தொடர் ந்து செய்து வந்தான். அவ்வமயம் இறைவன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப் பான் என்று கூற, இரணியன் தூணைக் கதையால் புடைத்தான். அது சமயம் பிரகலாத னுக்காகப் பெருமாள் நரனும், சிங்க மும் கலந்த வடிவொடு நரசிம்ம மூர்த்தி யாய்த் தூணில் தோன்றி அந்தியம் பொழுதில் இரணியன் மார்பைத் தன் கூர்மையான நகங்களினால் பிளந்து அழித்தார். என்ற அவதாரம் பற்றிய செய்தியை திருமங்கையாழ்வார் பாட லில் பின்வருமாறு கண்டுகொள்ள முடி கிறது:

"....தெள்ளிய சிங்கமாகிய தேவைத்
திருவல்லிக்கேணி கண்டேனே"

அடுத்த அவதாரமாக வாமனா வதாரம் விளங்குகிறது. இதனை திரிவிக் கிரமாவதாரம் எனவும் அழைக்கப்படுகி றது. இவ்வவதாரம் பற்றி ஆழ்வார் பாடல் களில், தேவர்கள் வேண்டுகோளால், தேவர்களுக்குத் துன்பம் தந்த மாவலிச் சக்கரவர்த்தி செய்த பெருவேள்வியில் முப்புரி நூலும், மான்தோலும் கொண்ட மார்பினை உடைய குறுகிய வாமன னாகச் சென்று தனக்கு மூன்றடி மண் தரு மாறு வேண்டினான். மாவலியும் அவ்வாறு தானம் செய்து கொடுத்த நீரைத்தன் உள்ளங்கையில் ஏற்றான். மாவலியிடம் தானம் பெற்ற நிலையில் நில உலகம் திருவடியாக, வாயுமண்டலம் திருமேனி யாக, திசைகள் எட்டும் தோள்களாக, அண்டமுகடு திருமுடியாக, திருமால் பேருருவம் கொண்டு, தன் ஓர் அடியால் நில உலகையும், மற்றொரு அடியால் விசும்பையும் அளந்து எஞ்சிய அடி யைமாவலியின் தலை மீது வைத்து அவனைப் பாதாளத்தில் அமுத்திச் சிறை வைத்ததாக கூறப்படுகிறது.

உலகில் தோன்றிய அரச வம் சத்தினர் முறை தவறி நடந்த பொழுது அவர்களை நாசம் செய்ய ஜமதக்கினி முனிவர்-ரேணுகை ஆகியோருக்ககு மக னாய்த்தோன்றி மழுப்படையை ஏந்திய திருமால் வடிவம் பரசுராமர் வடிவமாகும். தனது தந்தையின் உடைமையாய் இருந்த காமதேனுவைக் கவர்ந்த கார்த்த வீரியார்ச்சுனனுடைய கைகளையும், சிரத் தையும் தன் மழுவினால் அழித்தார். அது முதல் இருபத்தோரு தலை முறையள

வும் அரசரின் குலங்களை மழுவினால் துணிந்துவந்தார். இவ்வாறான அவதாரக் கருத்தினை திருமங்கையாழ்வார்:

"...கஞ்சனைக் கொன்றன்றுலகம் உண்டுமிழ்ந்த கற்பகத்தை...."

இறைவன் எடுத்த அவதாரங்களிலே மிகவும் சிறப்புற்றது இராமவதாரமாகும். கடவுளே ஆயினும் மனிதவடிவம் தாங்கி வந்துவிடின் இன்ப துன்பங்களை அனுபவித்தே தீரவேண்டும். என்பதற்கிணங்க இராமன் வாழ்ந்து காட்டினான். இவ்வவதார நோக்கம் பற்றி ஆழ்வார்பாடல்கள் கூறுகையில் விசுவாமித்திருடைய வேள்வியைக் காக்கவேண்டி தாடகையைக் கொன்று அரக்கர்களின் உயிர்கொண்ட செய்தியினையும், சீதையின் பொருட்டு ஜனகரின் வில்லை முறித்தமை, பரசுராமரின் வலியை அடக்கியமை, கூனி, கைகேயி சூழ்ச்சியினால் பரதனுக்குப் பாதுகையினை அளித்து தம்பி, மனைவியுடன் கானகம் சென்றமை, குகனுடன் நட்பு பூண்டமை, நாகாசூரனின் கண்ணை அறுத்தமை, விராதனை கொன்றமை, அகத்தியனிடம் வில் பெற்றமை, சூர்ப்பனகையின் மூக்கு அரிந்தமை, கர தூடணனைக் கொன் றமை, மாயமாரீசனையும், கவந்தனையும் வதைத்தமை, சுக்கரீவனுடன் நட்பு பூண்டு ஏழு மரா மரங்களை துளைத்து வாலியை வதம் செய்து சுக்கரீவனை அரசனாக்கி அனுமானை இலங்கைக்குத் தூது அனுப்பி இலங்கைக்கு அணை கட்டி விபூடணனுக்கு அடைக்கலம் அளித்து இந்திரஜித், இராவணன், கும்பகர்ணன் ஆகியோரை வதைத்துச் சீதையை மீட்டமை ஆகிய செய்திகளை விரி வாகக் கூறுகின்றன. இவ்வவதாரம் பற்றி ஆண்டாள் தம் பாவையில் இரண்டு இடங்களில் இராமனைப்பற்றி பாடியுள்ளார். திருப்பாவையில் இராமனை "மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய் திற வாய்" என்று பாடுகிறாள். இந்த அவதாரத்தைப் பாடுதலின் உள்நோக்கம் இராமனைப் போன்று மனத்தாலும் வேறு பெண்ணை நினைக்காமல் தன்னை மட்டுமே நினைத்திருக்க வேண்டும் எனும் அடிப்படையிலேயே என்பர். அவதாரம் பல எடுத்தாலும் அவன் தன் தாரம் ஆக வேண்டும் என்ப தற்காகவே ஆண்டாள் தன் திருப்பாவையில் அவனின் அவதாரச் சிறப்புக்களை பாடியுள்ளார் என்பது ஆய்வாளர் கூற்று.

இராமாவதாரத்தின் பின் திருமால், ரோகினியின் வயிற்றில் கண்ணனுக்கு மூத்தோனாகப் பிறந்தான் எனவும் தனது கட்டளைக்குப் பணியாமல் சென்ற யமுனா நதியைத் தன் கலப்பை ஆயுதத்தினால் நிறுத்திப் பின் யமுனாதேவி வேண்ட அதன் போக்கிலேயே செல்ல விட்டான் எனவும், கிருஷ்ண குமாரரான, சாம்பனைத் துரியோதனன் சிறை வைத்த பொழுது, அவனை மீட்பதற்காகத் தன்கலப்பையை அஸ்தினாபுர மதிலில் மாட்டி இழுக்க நகரமே அசைந்து சாயத் தொடங்கியது, இதனால் கௌரவர்கள் நடுங்கிச் சாம்பனை விடுவித்ததாக இவ்வதாரம் பற்றிய செய்தியினை ஆழ்வார் பாடல்களில் காண முடிகின்றது. இதனை திருமங்கை யாழ்வார்:

".... மூவுலகோடு அளை வெண்ணெய் உண்டான்தன் அடியினையே அடை நெஞ்சே"

ஒன்பதாவது அவதாரமாக கிருஷ்ணாவதாரம் குறிப்பிடப்படுகிறது. வானவர் துயர் தீரவும், மனிதர்கள் உய்யவும், வடமதுரையில் வாசுதேவர்- தேவகி மைந்தனாய்த் திருவோண நாளில் திருமால் கிருஷ்ணாவதாரத்தினை மேற்கொண்டு மண்ணுலகில் அவதரித்தார் எனவும் அவர் ஆயர் பாடியில் வளர்ந்தமை, பூதனைக் கொன்றமை, சகடம் உதைத்தமை, மண், வெண்ணை உண்டமை, மருதிடை தவழ்ந்தமை, ஆநிரை

மேய்த்தமை, காளிகா நர்த்தனம் புரிந்தமை, அக்ருரருக்குக் காட்சி அளித்தமை, குசேலனுக்கு செல்வம் தந்தமை, தேனுகாசுரன், அரிஷ்டா சுரன் ஆகியோரைக் கொன்றமை, நப்பின்னைக்காக ஏறுவை அடர்த்தமை, கேசியின் வாய் கீண்டியமை, கொக்கின் வாயை கிழித்தமை, கன்றினால் விளவெறிந்தமை, குருந்தமரம் உசித்தமை, குன்றெடுத்து ஆநிரை காத்தமை, கம்சனைக் கொன்றமை, சிசுபாலனைக் கொன்றமை, பாண்டவர்க்காக தூது சென்றமை, பார்த்தனுக்குத் தேர் ஓட்டியமை, பகவத்கீதை அருளியமை முதலான கிருஷ்ணாவதாரம் பற்றிய பல்வகைச் செய்திகளை ஆழ்வார் பாசுரங்களில் கண்டு கொள்ள முடிகின்றது.

இறுதியாக பத்தாவது அவதாரமாகக் குறிப்பிடப்படும் கல்கி அவதாரம்பற்றிய செய்திகளை ஆழ்வார் பாடல்களில் கண்டுகொள்ள முடிகின்றது. அதாவது உலகில் தருமம் தவறி, பொறுமை அழிந்து, உண்மை ஒழிந்து, அன்பும் அருளும் கலங்கி, பூசனைகள் சிதைவுற்று, பாவங்களே வெற்றிபெறும் இக்கலியுக முடிவில் இவ்வையத்தினைக் காக்கக் குதிரை மீது அமர்ந்து கல்கி வடிவில் திருமால் அவதாரம் செய்வார் என ஆழ்வார் பாடல்கள் விபரிக்கின்றன. இது பற்றிய திருமங்கையாழ்வார் பாடலொன்றில்:

"கடும்பரிமேல் கற்கியை நான் கண்டு
கொண்டேன்
கடிபொழில் சூழ் கடல்மல்லைத்
கலசயனத்தே"

என இவ்வவதாரம் பற்றிய சிந்தனையைக் கண்டுகொள்ள முடிகின்றது.


இவ்வாறாக விஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களுக்கும் ஒவ்வொரு நோக்கம் உண்டு என்பதனை மேலே கூறப்பட்ட ஆழ்வார்பாடல்களில் காணப்படும் அவதாரம் பற்றிய செய்திகளுடாக அறிய முடிகிறது. அவற்றினைத் தொகுத்து நோக்கின், மச்சவதாரம்-நான்கு வேதங்களைக் காத்தமை, கூர்மவ தாரம் - தேவர்கள் அமுதம் பெற உதவியது, மலையைத் தாங்கியமை, வராகவதாரம்- இரணியாட்சனிடமிருந்து பூமியைக் காத்தமை, நரசிம்மவதாரம்-எல்லாவற்றிலும் தான் இருப்பதை உணர்த்தியமை, வாம னவதாரம்-மகாபலி ஆணவம் அழித்தது, பூமியை அளந்தமை, பரசுராமவதாரம் - நீதி மறந்த மன்னர்களை ஒழித்தமை, இராம அவதாரம்-தந்தை சொல்லை நிலை நாட்டியமை, பலராமவதாரம்- அண்ணனின் கடமையைச் செய்தமை, கிருஷ்ணவதாரம்-பூபாரம் தீர்த்துப் பசுக்களைக்காத்தமை, கல்கி அவதாரம்-பாவம் பெருகும்போது எடுக்க இருப்பது என்றவாறாக அமைகிறது. இதுபற்றி ஆண்டாள் பாடுகையில்:


"அன்று இவ்வுலகம்
அளந்தாய்!அடிபோற்றி!
சென்று அங்குத் தென்னிலங்கை
சென்றாய்!போற்றி!
போன்றச் சகடம் உதைத்தாய்!புகழ்
போற்றி!
குன்று குணிலா எறிந்தாய்!கழல்
போற்றி
குன்று குடையா எடுத்தாய்!குணம்
போற்றி!
வென்று பகைகெடுக்கும் நின்கையில்
வேல் போற்றி!
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பாறை
கொள்வான்
இன்றியாம் வந்தோம்!இரங்கேலோர்
எம்பாவாய்"

எனப்பாடுவதன் ஊடாகவும் ஆழ்வார் பாடல்களில்காணப்படும் அவதாரம் பற்றிய செய்திகளை தெரிந்துகொள்ள முடிகின்றது.


சக்கரம் ஆண்டுச் சிறப்பு இதழுக்கு எம் இனிய வாழ்த்துக்கள்.
அம்பாள் ஸ்ரோர்
பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி. பருத்தித்துறை.
T.P : 021 226 3103


நல்லூர்
சரவணா
ரெக்ஸ்
திருமணப் பட்டுச் சேலைகள்
சல்வார் சோலி &
ரெடிமேட் ஆடைகள்
770, 772, கே.கே.எஸ். வீதி,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 0421
171, பிரதான வீதி,
நெல்லியடி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 226 2992
526, 529 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சிவன் கோயில் அருகாமை)
T.P. 021 222 1723


ஸ்ரீகிருஷ்ணா
கிறீம் ஹவுஸ்
திருமண வைபவங்களுக்கும்
மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும்
தேவையான குளிர்பானத் தேவைகளை
பூர்த்தி செய்யும்
ஒரே இடம்
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.
T.P. 0772487475




குமாரி ஸ்ரோர்ஸ் பிரதான வீதி, பருத்தித்துறை.

மடாதிபதி வை.ஆனந்தராசா அவர்களால் நாவலர் வீதியில் அமைந்துள்ள மாருதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.